பாரதியார் குள்ளச் சாமி என்ற ஒரு சித்தரை அறிந்திருந்தார். அவர் மீது மிகவும் மதிப்பும் கொண்டிருந்தார். ஒரு முறை குள்ளச்சாமி பழங்கந்தைகளும், குப்பைகளும் கொண்ட அழுக்குமூட்டை ஒன்றை முதுகில் சுமந்தபடி வருவதைக் கண்ட பாரதியாருக்கு என்னவோ போல் ஆகி விட்டது. சித்தராகக் கொண்டாடியவரை இப்படி பழங்குப்பை சுமக்கும் பைத்தியக்காரராகக் காணும்படியாகி விட்டதே என்று பாரதியாருக்கு ஒரே வருத்தம்.

'ஐயா ஏனிந்த கோலம். உங்கள் செய்கை பைத்தியக்காரரரின் செயல் போலல்லவா இருக்கிறது' என்று கேட்டார் பாரதி. 'நான் குப்பைகளை வெளியே சுமந்து கொண்டிருக்கிறேன். நீ உள்ளே சுமந்து கொண்டிருக்கிறாய்' என்று புன்னகையுடன் சொன்ன குள்ளச்சாமி பாரதியாரைச் சிந்திக்க வைத்து விட்டு சென்று விட்டார். பாரதியாரின் பாடல் இதோ-

மற்றொருநாள் பழங்கந்தை யழுக்கு மூட்டை
வளமுறவே கட்டியவன் முதுகின் மீது
கற்றவர்கள் பணிந்தேத்தும் கமல பாதக்
கருணை முனி சுமந்து கொண்டென் எதிரே வந்தான்.
சற்றுநகை புரிந்தவன் பால் கேட்கலானேன்
'தம்பிரானே இந்தத் தகைமை என்னே?
முற்றுமிது பித்தருடைச் செய்கை யன்றோ?
மூட்டை சுமந்திடுவதென்னே? மொழிவாய்' என்றேன்.
புன்னகைபூத் தாரினும் புகலுகின்றான்?
"புறதேநான் சுமக்கின்றேன்? அகத்தி னுள்ளே
இன்னதொரு பழங்குப்பை சுமக்கி றாய் நீ'
என்றுரைத்து விரைந்தவனும் ஏகி விட்டான்.
மன்னவன் சொற் பொருளினையான் கண்டு கொண்டேன்?
மனத்தினுள்ளே பழம்பொய்கள் வளர்ப்ப தாலே
இன்னலுற்று மாந்தரெல்லாம் மடிவார் வீணே,
இருதயத்தில் விடுதலையை இசைத்தல் வேண்டும்.

குள்ளச்சாமியின் பதில் பாரதியாரை மட்டு மல்ல நம்மையும் சிந்திக்க வைக்கக்கூடிய உண்மை. வெளியே குப்பைகளை சுமப்பவரைக் கண்டால் பைத்தியக்காரர் என்று ஏளனம் செய்யும் நாம் அதை விட மோசமானதும் பழமையானதுமாய் எத்தனை குப்பைகளை நம் மனதில் சுமந்து கொண்டிருக்கிறோம்? புறத்தை சுத்தமாய், அழகாய் வைத்திருக்கும் நம்மில் எத்தனை பேர் அகத்தை சுத்தமாய், அழகாய் வைத்திருக்கிறோம்?

மனதின் உள்ளே இருக்கும் பழைய நினைவுகளில் எத்தனை நினைவுகள் இனிமையானவை? எத்தனை நினைவுகள் பயனுள்ளவை? இந்தக் கணக்கை ஒவ்வொருவரும் எடுத்துப்பார்த்தால் நன்மையானவையும், பயனுள்ளவையும் நம் மனதில் மிகச் சொற்பமானதாகவே இருப்பதைப் புரிந்து கொள்ளலாம். பெரும்பாலான மனிதர்கள் தங்கள் வாழ்வில் நிகழும் நன்மைகளையும், பெற்ற நல்லவற்றையும் நீரில் எழுதி வைக்கிறார்கள். நேர்ந்த தீங்குகளையும், இழந்தவற்றையும், தொலைத்தவற்றையும் கல்லில் எழுதி வைத்துப் பாதுகாக்கிறார்கள். அங்கலாய்க்கிறார்கள். அந்தப் பயன் படாத, நிம்மதியைக் குலைக்கும் நினைவுகள் பழங்குப்பைகளே. குப்பைக் கூளங்கள் மிகுதியாக இருக்கும் இடங்கள் நோய்களின் உற்பத்தி ஸ்தானங்கள். எத்தனையோ மனநோய்களின் உற்பத்திக்காரணங்கள் இது போன்ற பழங்குப்பைகள் தான்.

குள்ளச்சாமி சுட்டிக் காட்டிய உண்மை உறைக்க பாரதியார் இது போன்ற குப்பைகள் சுமப்பது முட்டாள்தனம் என்று அழகாய் பாடியுள்ளார்.

சென்றதினி மீளா மூடரே, நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்?சென்றதனைக் குறித்தல் வேண்டா
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்றுவிளையாடியின்புற் றிருந்து வாழ்வீர்?
அஃதின்றிச் சென்றதையே மீட்டும் மீட்டும்.
மேன்மேலும் நினைந்தழுதல் வேண்டா, அந்தோ!
மேதையில்லா மானுடரே!

கடந்த காலத்தின் இனிமைகளை கல்லில் செதுங்குங்கள். கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களில் இருந்து பாடங்கள் கற்று பாடங்களை மட்டும் நினைவு வைத்துக்கொண்டு கசப்பான அனுபவங்களை குப்பைகளாய் எண்ணி அகற்றி விடுங்கள். குப்பைகளை சுமப்பதில் அர்த்தம் இல்லை. மேலும் நடந்து முடிந்த, மாற்ற முடியாத விஷயங்களை மனதில் எண்ணி உருகும் போது நிகழ்கால நல்ல விஷயங்களை அனுபவிக்கத் தவறி விடுகிறோம். இது இரட்டை நஷ்டமே அல்லவா?

நம் நிம்மதியைக் குலைப்பது நம் பழைய தவறான செயல்கள் என்றால் இனி அப்படி செய்யக் கூடாது என்று உறுதியாக தீர்மானிப்பதைத் தவிர அதுகுறித்து நம்மால் செய்ய முடிவது வேறொன்றுமில்லை. நம்மை அலைக்கழிக்க வைப்பது அடுத்தவர் செயல்கள் என்றால் இனி அது போன்ற செயல்கள் நம்மை பாதிக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து அதற்கேற்ப நம்மைத் தற்காத்துக் கொள்வதே நாம் செய்ய வேண்டிய அறிவார்ந்த செயல். அதை விட்டு அப்படியாகி விட்டதே என்று எண்ணி எண்ணி வருந்தியபடியே இருப்பது முட்டாள்தனமே.

பாரதியின் 'இன்று புதிதாய் பிறந்தோம்' என்ற வரியை தாரக மந்திரமாய் எடுத்துக் கொள்ளுங்கள். உண்மையில் ஒவ்வொரு நாளும் நம் வாழ்வின் புதிய பக்கமே. எழுதி முடித்த பக்கங்களைத் திருத்தும் சக்தி நமக்கில்லை என்றாலும் புதிதாய் எழுதப் போகும் பக்கங்களை எப்படி நிரப்புகிறோம் என்பது நம் கையிலேயே அல்லவா இருக்கிறது? அந்த சுதந்திரத்தை முறையாக நாம் பயன்படுத்திக் கொண்டால் இனிவரும் நாளெல்லாம் இனிய நாளே!

- என்.கணேசன்

மேற்கின் பார்வையில் தமிழரமைப்புக்கள்

கோபி
ஒரு பேப்பர்

கடந்த *ஒரு பேப்பர்* இல், வெளிச்சக்திகளின் அழுத்தங்களினால் தமிழ் அமைப்புகள் சில கூட்டாக 'தென்னாபிரிக்க பிரகடனம்' என ஒன்றினை வெளியிடவுள்ளதாக குறிப்பிட்டிருந்தோம். தமது அடிப்படைக் கோட்பாடுகளுக்கு குந்தகமாக அமையும் எத்தகைய பிரகடனத்திலும் தாம் கைச்சாத்திடப் போவதில்லை என நாடு கடந்த அரசாங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்கள் இக்கட்டுரையாளருக்கு தெரிவித்தனர். இப்பிரகடனம் பற்றிய மேலதிக தகவல்கள் இதுவரை கிடைக்கப் பெறாவிட்டாலும், இவ்விடயத்துடன் தொடர்புபட்ட அமைப்புகள் எதனை நிறைவேற்ற முற்படுகின்றன என்பதனை அலசுவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

அமெரிக்கா மற்றும் மேற்கத்தைய நாடுகளைப் பொறுத்தவரை, 'தாராண்மைவாத சமாதானம்' (Liberal Peace) என்ற தலைப்பின் அடிப்படையில் இலங்கைத்தீவின் அரசியல் நிலவரத்தை கையாண்டு வருகின்றன. இதனடிப்படையிலேயே விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு ஆதரவும், விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு சிறிலங்கா அரசுக்கு உதவியும் வழங்கப்பட்டன. மேற்கு நாடுகள் தமது, வர்த்தக, பிராந்திய நலன்களின் அடிப்படையில், உலக நாடுகளை தமது ஒழுங்குக்குள் கொண்டுவர முற்படுகின்றன என்ற விடயத்தை மேலதிகமாக இங்கு விபரிக்கத் தேவையில்லை. ஆகவே அமைதியான சூழல் ஒன்றை உருவாக்குவது முக்கியமானதாக உள்ளதே தவிர, ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்கு நீதியை பெற்றுக் கொடுப்பது பற்றிய அக்கறை வெளிப்படவில்லை. இதன் அர்த்தம் இனமுரண்பாடுகளுக்கான காரணிகள் உணரப்படவில்லை என்பதல்ல. மாறாக தீர்வுக்கான வழிமுறைகளில் அவை உள்ளடக்கப் படவில்லை.

மேற்படி நிலைப்பாட்டிலிருந்து விலகி, நாடுகளிலுள்ள தேசிய இனங்களின் உரிமை தொடர்பாக அக்கறை செலுத்தப்பட்ட நிகழ்வுகளும் உண்டு. கொசோவா, தென்சூடான் போன்றவை அதன் அண்மைய வரலாறுகள். தாரண்மைவாத ஒழுங்கிற்குள் குறித்த நாடு வரமறுக்கும் பட்சத்தில், அந்நாட்டை வழிக்கு கொண்டு வருவதற்கு உள் நாட்டில் ஒடுக்கப்படும் இனத்திற்கு உதவுவதாக உள் நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யப்படுகிறது. இவ்வாறான முயற்சிகளில், நிலமையின் தாற்பரியத்தைப் பொறுத்து தேசிய இனம், சுயாட்சி, சமஸ்டி, சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம் என்பன முக்கியப்படுத்தப்படும். இது நாடு பிரிவதில்கூட முடிவடையலாம்.

இந்த வரலாற்று அனுபவங்களைக் கொண்டு, இலங்கைத் தீவின் இனமுரண்பாட்டை, மேற்குலகம் எவ்வாறு கையாளுகிறது என்பதனைப் பார்க்க வேண்டியிருக்கிறது. தனது ஒழுங்கிற்குள் கொண்டுவர முடியாத அல்லது வேற்று ஒழுங்குக்குள் சென்றுவிடத் துடிக்கும் ஒரு அரசாக சிறிலங்காவை மேற்கு நாடுகள் பார்க்கவில்லை. மாறாக தற்போதைய அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுப்பதன் மூலம், ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்துவதன் மூலம் சிறிலங்காவை தனது ஒழுங்கிற்குள் கொண்டுவர முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்பவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

சிங்கள மக்களுக்கு முன்னால், மகிந்த இராஜபக்ச, தன்னை ஒரு மேற்குலக எதிர்ப்பாளராக காட்டிக் கொண்டாலும், அவரது மேற்கத்தைய விசுவாசம் அவ்வப்போது நன்கு வெளிப்படுகிறது. எலிசபத் மகாராணியார் முடிசூடிக்கொண்டதன் வைர விழாவில் கலந்து கொண்ட குறைந்த எண்ணிக்கையான பொது நலவாய நாடுகளின் தலைவர்களில் மகிந்தவும் ஒருவர் என்பதனை கருத்தில் எடுத்துக் கொண்டால், கிடைக்கிற சந்தர்ப்பத்தை பாவித்து மேற்குலகத்திற்கு பயணம் மேற்கொள்வதில் அவர் கொண்டுள்ள விருப்பு வெளிப்படுகிறது. தவிரவும், மேற்குநாடுகளிலுள்ள பெருவர்த்தக நிறுவனங்கள் சிறிலங்காவில் முதலீடுகளைச் செய்ய வேண்டும் என சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்த்து நிற்கிறது.

மகிந்த அரசாங்கத்தை தவிர்த்தால், கொழும்பின் அதிகாரவர்க்கம் மேற்குலகத்துடன் சுமூகமான உறவினைப் பேணி வருகிறது. உதிரியாக ஒரிருவர் மேற்கத்தைய எதிர்ப்பை மிகத்தீவிரமாக வெளிப்படுத்தினாலும், குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் ஏகாதிபத்திய எதிர்ப்பினை காட்டக்கூடிய கொம்மியுனிச புரட்சி அமைப்புகள் அங்கு இல்லை. இந்நிலையில் சிறிலங்காவிற்கு எதிரான நிலைப்பாட்டை மேற்குலகம் எடுக்கும் என எதிர்பார்க்க முடியாது. அவ்வப்போது அழுத்தங்கள் பிரயோகித்தாலே கொழும்பு தங்கள் காலடியில் வந்து கிடக்கும் என மேற்குலகம் எதிர்பார்ப்பது, சரத் பொன்சேகாவின் விடுதலை மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.

இந்த பின்புலத்திலேயே, தமிழ் அமைப்புகளிடமிருந்து மேற்குலகம் எதனை எதிர்பார்க்கிறது என்பதனை அணுகவேண்டியுள்ளது. நாம் விரும்பியோ விரும்பாமலோ, எமது அரசியற் செயற்பாடுகள் மேற்குலகத்தினை அனுசரித்தவாறு மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று தமிழ் அமைப்புகள் கூறுவதனை மறுப்பதற்கில்லை. புலம்பெயர் நாடுகளிலுள்ள அமைப்புகளுக்கு மட்டுமல்ல தாயகத்திலுள்ள அமைப்புகளுக்கும் இது பொருந்தும். ஏகாதிபத்திய எதிர்ப்பினை வலியுறுத்தும் இடதுசாரி சிந்தனையுடைய சில குழுக்கள் இவற்றுள் அடங்கவில்லை எனச் சிலர் வாதிடலாம். பேச்சிலும், எழுத்திலும் தங்களை அடையாளப்படுத்துகிற இந்தக் குழுக்கள் ஈழத்தமிழ் அரசியலில் பொருட்படுத்தக் கூடிய சக்திகள் அல்ல என்பதனை அவர்களே நன்கு அறிவார்கள்.

சிறிலங்காவின் எதிர்கட்சிகள், அமைப்புகளைக் காட்டிலும், மேற்குநாடுகளில் உள்ள தமிழ் அலைந்துழல்வு சமூகமே இன்று சிறிலங்கா அரசிற்கு பெரும் சவாலாக விளங்குகிறது. சிறிலங்கா அரசாங்கத்தின் இனவழிப்பு நடவடிக்கைகளை வெளியுலகத்திற்கு கொண்டுவந்ததன் மூலம், சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கு சர்வதேச அரங்கில் நெருக்கடியை ஏற்படுத்துபவர்களாக அலைந்துழல்வு சமூகமே காணப்படுகிறது. இந் நடவடிக்கைகளுக்கு சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள், மையஊடகங்கள் என்பன ஆதரவு வழங்குவதனால், இவ்விடயத்தில் மேற்கத்தைய அரசாங்கங்களின் தந்திரோபாய ஆதரவு இருக்கிறது என சிறிலங்கா நம்புகிறது. அதில் உண்மையும் இருக்கிறது.

மேற்கில் காணப்படும் ஜனநாயக சுதந்திரம் (இது பற்றி கேள்விக்கு உள்ளாக்க முடியும்), புலம்பெயர் அமைப்புகளுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும் கொடுத்திருக்கும் செயற்பாட்டுத்தளத்தை வெளிப்படையான அழுத்தங்கள் மூலம் சிதைப்பது சாத்தியமில்லை. ஆகவே இத்தளத்திலிருந்து விடுதலைப்புலிகள் இயக்கம் மீளக்கட்டியமைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக சிங்களத் தேசியவாதிகள் அச்சப்படுவதுபோலவே, மேற்குலக நாடுகளும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். இந்நிலையில் வைத்தே புலம்பெயர் தமிழ் அமைப்புகள்மேற்குலகத்தால்கையாளப்படுகின்றன.

புலம்பெயர் நாடுகளில் எத்தனை தமிழ் அமைப்புகள் இருக்கின்றன அவை எத்தகைய கொள்கையின் அடிப்படையில் செயற்படுகின்றன, அவற்றினை இயக்குபவர்கள் யார் என்ற எல்லா விபரங்களையும், இவ்விடயத்தை கையாளுபவர்கள் உடனுக்குடன் அறிந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு தகவல் போதாமை ஏற்படும்போது, இவ்வாறான ஆராய்ச்சியை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு எம்மவர்களிடமே விட்டுவிடுவார்கள். உதாணத்திற்கு, முன்னர் வெளிநாட்டுக் கட்டமைப்புகளின் முக்கிய பிரமுகராக இருந்த ஒருவர் அக்கட்டமைப்புகள் பற்றியும் அவற்றின் தற்போதைய நடவடிக்கைகளைப்பற்றியும் ஜெர்மனியை தளமாக இயங்கும் ஒரு 'சமாதான' அமைப்புக்காக எழுதிய ஆய்வுக்கட்டுரை ஒன்றினை இணையத்தில் காணலாம். (www.berghof-peacesupport.org/publications/SL_Diaspora_Papers_Sarvendra.pdf) ஆகவே புலம்பெயர் நாடுகளில் செயற்படும் அமைப்புகளில் எவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கி தூக்கி நிறுத்த வேண்டும் என்பதனை தீர்மானிப்பது மேற்குலக கொள்கை வகுப்பாளர்களுக்கு சிரமமானதாக இருக்கப்போவதில்லை. இந்த அடிப்படையிலேயே, உலகத்தமிழர் பேரவை இவர்களது கவனத்தினைப் பெறுகிறது.

> அமைதியான சூழல் ஒன்றை உருவாக்குவது முக்கியமானதாக உள்ளதே தவிர, ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்கு நீதியை பெற்றுக் கொடுப்பது பற்றிய அக்கறை வெளிப்படவில்லை. இதன் அர்த்தம் இனமுரண்பாடுகளுக்கான காரணிகள் உணரப்படவில்லை என்பதல்ல. மாறாக தீர்வுக்கான வழிமுறைகளில் அவை உள்ளடக்கப்படவில்லை.

உலகத்தமிழர் பேரவையானது அடிப்படையில் மக்கள் அமைப்புகளின் கூட்டமைப்பு போல் தோற்றமளித்தாலும், தீர்மானமெடுக்கும் நிலையில் ஒரு சிலரே இருப்பது, இவ்வமைப்பினை தமது விருப்பிற்கு ஏற்ப பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கையை மேற்குலக சக்திகளுக்கு கொடுத்துள்ளது. ஆதலால் அமெரிக்க தரப்பின் விருப்பிற்குரிய தேர்வாக உலகத்தமிழர் பேரவை அமைந்துள்ளது.

வட அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட நாடு கடந்த அரசாங்கம் இத்தகைய கவனத்தைப்பெறாமைக்கு அதன் யாப்பு, தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கொண்ட உறுப்பினர் அவை என்பன காரணமாக அமைகின்றன. இன்னொருவகையில் பார்த்தால், தமிழ் அமைப்புகள் தங்களை முழுமையாக சனநாயக மயப்படுத்துவார்களானால் அவர்களை நெருங்குவதில் வெளிச்சக்திகள் தயக்கம் காட்டுகின்றன. சனநாயகம் பற்றி பெரிதும் அக்கறைப்படும் சூழலில், இது முரண்நகையாகத் தோன்றினாலும், அடிவருடித்தனத்தையே வல்லாதிக்க சக்திகளும் வரவேற்று நிற்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதன் நிகழ்கால உதாரணமாக ஆப்கானிஸதானின் ஹமிட் காராசி (Hamid Karzai) திகழ்கிறார்.

ஈழத்தமிழ் மக்களின் ஒப்புதல் இல்லாத எத்தகைய பிரகடனங்களையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அதேசமயத்தில் சனநாயக ரீதியில் இயங்க முற்படும் அமைப்புகளை சீரமைப்பதிலும் பலப்படுத்துவதிலும் அவர்கள் ஆர்வம் காட்டவேண்டும்.

ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

New Malden
Ayngaran 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan 020 8605 0434
Murugan Kovil 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

Tooting
Yhaal House 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil 020 8795 4258
Niru Con.Store 020 8672 3200
Ayngaran 020 8540 1500
Suvai Aruvi..... 020 8543 6266
Adchaya 020 8540 8192

Croydon
Best Foods..... 020 8684 6269
Haran Bros..... 020 8686 2552
Chennai dosa 020 8665 9192
Eelam Video..... 020 8664 8351
Spice Land..... 020 8667 1700

Lewisham
Chandra 020 8333 8680
Eelam Shop 020 8690 6545
Katpagam 020 8694 8810
AJ Video 020 8691 8888
Sivan Kovil 020 8318 9844
KRS 020 8297 9432

Eastham
Seelans..... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food 020 8552 9578
Akilan Enterprise 020 8548 0033

Ilford
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan 020 8514 1744
Angels 020 8553 0490
Sri Supermarket .....

Edmonton
New Kannan Stores 020 8884 4979
Sayas..... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

Walthamstow
Vinayagar Kovil..... 020 8527 3819
Kumarans 020 7609 1912
Prabas 020 8509 3322

Harrow
Tsk food & Wine 020 7622 4258
Eelavan 020 8863 6160
Prabhas 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods..... 020 8423 9933
Sambal Express..... 020 8799 7171

Wembley
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods..... 020 8900 0100
Vahizan Disc 020 8795 0648

Ealing
Amman kovil..... 020 8810 0835

Greenford
Ambiha 020 8813 0967

Coventry
Eellakanthan Temple...02476663554

South hall
Thamilini C & C..... 020 8606 9900
Duvaraka C & C 020 8813 9126
Palm Palace 020 8574 9209
Spicy Palace restaurant 020 8574 4087
Luxmys C & C 020 8571 4599
Tamilan C & C 020 8561 8174
Lady Margret 020 8571 4434




UPGRADE
YOUR
FUTURE

BIRMINGHAM CITY University

bcu.ac.uk

STUDY IN THE UK

Birmingham City University Open Day

Thursday 19th July, 3:30pm - 6:30pm
Regent Street, London

Meet BCU for student interviews in London:
Receive on-the-spot offers for Sept 2012
Scholarships of £1000 available
Accept 3rd Class Degrees for postgraduate courses
18 month MSc Management and International Business

Register now!
SI-UK Education Council, the official representative of Birmingham City University
W: www.studyin-uk.com **T:** 020-7287-7040
3rd Floor, 211-213 Regent Street, London, W1B 4NF

SI UK Education Council

சிவமயம்
இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்

SRI SELVA VINAYAGAR TEMPLE

299-303, Ley Street, Ilford Essex IG1 4BN Tel: 0208 9118 934
www.sriselvavinayagar.org.uk / e-mail: info@sriselvavinayagar.org.uk

9ம் ஆண்டு மஹோற்சவ திருவிழா அழைப்பிதழ் 2012

ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் அடியார்களே!

ஈரேழு பதினான்கு லோகங்களுக்கும் முழுமுதற் கடவுளாக ஓம் எனும் பிரணவப் பொருள் விளக்கமாகி தமக்கு மேலான தலைவரின்றி தம்மை மெய்யன்போடு வழிபடுபவர்க்கு சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும் இல்போட் பகுதியில் வீற்றிருக்கும் இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் 9ம் ஆண்டு மஹோற்சவப் பெருவிழா நிகழும் மங்களகரமான நந்தன வருடம் ஆனி மாதம் 30ம் நாள் (13.07.2012) வெள்ளிக்கிழமை தசமி திதியும் பரணி நட்சத்திரத்தில் அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில் காலை 7.30 மணிக்கு விக்கினேஸ்வர பூஜை, கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி காலை 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் உள்ள சுபநேரத்தில் கொடியேற்றத்துடன் (துவஜாரோகணம்) திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து நாட்கள் காலையிலும் மாலையிலும் வெகுவிமரிசையாக நடைபெறும். தினமும் காலை, மாலை, ஸ்னபன கும்ப அபிஷேகம், பூஜை, கொடித்தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை, வேத தோத்திர திருமுறை பாராயணம், ஆன்மீக மற்றும் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்று, பிரசாதம் வழங்கப்படும். இம்மஹோற்சவ காலங்களில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகைதந்து எம்பிரானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மஹோற்சவகால நிகழ்ச்சி நிரல்

காலை 08.00 மணி	நித்திய பூசை	
காலை 09.30 மணி	விசேட கலச பூசை, ஹோமம்	
காலை 10.30 மணி	மகா அபிஷேகம்	
காலை 11.15 மணி	கொடித்தம்ப பூசை,	
காலை 11.30 மணி	வசந்த மண்டப பூசை, சுவாமி உள் வீதி உலா	
பகல் 12.30 மணி	மகேஸ்வர பூசை	
மாலை 05.00 மணி	நித்திய பூசை	
மாலை 05.30 மணி	கொடித்தம்ப பூசை	
மாலை 06.00 மணி	சுற்றுப்பளி பூசை	
மாலை 06.30 மணி	வசந்த மண்டப பூசை	
இரவு 07.15 மணி	சொற்பொழிவும், மகேசுர பூசை	
இரவு 08.00 மணி	சுவாமி வெளி வீதி எழுந்தருளல்	
இரவு 08.30 மணி	மேளக்கச்சேரி (வடக்கு வீதி)	
இரவு 09.00 மணி	பிரசாதம் வழங்கல்	
13.07.2012	வெள்ளிக்கிழமை	கொடியேற்றம்
18.07.2012	புதன்கிழமை	கற்பூரத்திருவிழா
22.07.2012	ஞாயிற்றுக்கிழமை	மாம்பழத்திருவிழா
02.08.2012	வியாழக்கிழமை	மஞ்சத் திருவிழா
03.08.2012	வெள்ளிக்கிழமை	வேட்டைத்திருவிழா
04.08.2012	சனிக்கிழமை	சப்பரத் திருவிழா
05.08.2012	ஞாயிற்றுக்கிழமை	தேர்த்திருவிழா
06.08.2012	திங்கட்கிழமை	தீர்த்தத்திருவிழா
07.08.2012	செவ்வாய்க்கிழமை	பூங்காவனம்
08.08.2012	புதன்கிழமை	வைரவர் மடை

தேர்த்திருவிழா 05-08-2012

அனைவரும் வருகை தந்து எம்பெருமான் அருள் பெற வேண்டுகிறோம்.

உற்சவ காலங்களில் அபிஷேகத்திற்குத் தேவையான பால், தயிர், இளநீர், தேன், பழம், பூக்கள் மற்றும் அன்னதானத்திற்குத் தேவையான காய்கறி, அரிசி முதலியவற்றை வழங்க விரும்பும் அடியார்கள் அவற்றை ஆலய அலுவலகத்தில் கொடுக்கலாம்.

அன்புடன் ஆலய நிர்வாகத்தினர்கள்.

மக்களின் ஆணையைப் பெறுமா சர்வதேசப் பிரகடனம்

கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகக்கடுமையான வீழ்ச்சியை இந்த வாரம் இலங்கையின் பங்குச் சந்தை எதிர்கொண்டுள்ளது.

2011 நவம்பரிலிருந்து இற்றைவரை 17.5 சதவீதம் தனது ரூபாய் நாணயத்தின் பெறுமதியை இலங்கை இழந்துள்ளது.

இறக்குமதியாகும் அத்தியாவசிய எரிபொருளான மசகு எண்ணெய்க்கு செலுத்த வேண்டிய டொலர் நாணயப் பற்றாக்குறையால், அனைத்துலக நாணய நிதியத்திடமிருந்து 500 மில்லியன் டொலர்களை கடன் வாங்க வேண்டிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது பி.பீ.ஜெயசுந்தராவின் திறைசேரி.

மகிந்தர் பெருமைப்படும் 7.2 சதவீத பொருளாதார வளர்ச்சி வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கொண்டுவர இயலாத நிலையில் ஊடகங்களில் சொல்லப்படும் சுயதம்பட்டங்கள் போலியானவை என்பதை தெரிந்து கொள்வது சுலபம்.

அத்தியாவசியப் பொருட்களின் செயற்கையான விலை அதிகரிப்பினால் நாட்டின் பணவீக்கம் கடந்த ஜுன் மாதத்தில் என்றுமில்லாதவாறு உச்சத்தைத் தொட்டுள்ளது.

பணவீக்கத்திற்கு ஏற்றவாறு தமது சம்பளத்தை உயர்த்துமாறு தொழிலாளர்கள் போராட ஆரம்பித்துள்ளனர்.

தேசிய இனங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட முடியாத நிலைபோன்று மத்திய வங்கிக்கும் திறைசேரிக்குமிடையே முறுகல் நிலை அதிகரிப்பதைக் காணலாம்.

வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு கடன் கொடுக்க முடியாத அளவிற்கு அதன் திரவப் பணம் வற்றிச் செல்கிறது.

அதனை நிவர்த்தி செய்ய ரூபாய் நாணயத்தை மேலதிகமாக அச்சடித்தால் பணவீக்கம் அதிகரிப்பதை தடுக்க முடியாமல் போய் விடும்.

இப்பிரச்சினையானது இலங்கையில் மட்டுமல்லாது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் விரிவடைவதைக் காணலாம்.

வங்கிகளுக்கிடையே நிகழும் பரிவர்த்தனையில் வட்டி வீதத்தில் ஏற்பட்ட லைபோர் குளறுபடிகளால், பிரித்தானியாவின் மிகப்பெரிய வங்கியான பார்க்ளேயில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு அதன் தலைவர் பொப் டயமன்ட் பதவி விலகியுள்ளார்.

நிதிநெறியாள்கை அதிகார சபையின் கவனம், இவ்விவகாரத்தில் குவிவதால், மேலும் பல வங்கிகள் சிக்கல்களை எதிர்கொள்ளப் போவதைக் காணலாம்.

இலங்கையிலும் இத்தகைய நாணயப் பரிவர்த்தனை குளறுபடிகள் வெளியில் பெரிதாகத் தெரியாதளவிற்கு உருவாகிக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது.

ஆடை மற்றும் தேயிலை ஏற்றுமதித் துறையில் மேலதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று பல தென்னிலங்கை பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டினாலும், இலங்கையின் பொருளாதாரத்தை சுற்றுலாப் பயணத்துறையை மையமாகக் கொண்டு உருவாக்க வேண்டுமென மகிந்த சிந்தனை அடம் பிடிப்பதைக் கவனிக்கலாம்.

நுவரெலியா உட்பட நாடெங்கும் உள்ளூர் விமான நிலையங்களை நிர்மாணிப்பதும், சீன, இந்திய முதலீட்டில் அதிவேக விரைவுப் பாதைகளை அமைப்பதும், எயர்லங்கா, மிகின் லங்கா விமானச் சேவைகள் நட்டத்தில் இயங்கினாலும் மேலதிக பயணிகள் விமானங்களை வாடகைக்கு வாங்குவதும், மகிந்தருக்கு உல்லாசப் பயணத்துறைப் பொருளாதாரத்தில் இருக்கும் அதீத நம்பிக்கையையும், ஈடுபாட்டையும் காட்டுகிறது.

இதேவேளை உல்லாசப் பயணத்துறையில் முதலீடு செய்வதற்கு பல ஆசிய நாடுகள் முண்டியடிப்பதைக் கவனிக்கலாம்.

அத்தோடு மேற்குலகு உட்பட பல வல்லரசுகள், திருமலைத் துறைமுகத்தில் கனரக தொழிற்சாலைகளை நிர்மாணிக்க கூட்டாகச் செயற்படும் செய்தியையும் பார்க்கலாம்.

“நல்லிணக்கம்” என்கிற பாதை ஊடாக தமது முதலீடுகளை இலங்கைக்குள் கொண்டு செல்ல விரும்பும் அமெரிக்காவும், இந்தியாவும் வெவ்வேறான நகர்வுகளை மேற்கொள்கின்றன.

ஊடக அடக்குமறையைக் கண்டித்து அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் அறிக்கை விடும் அதேவேளை முதலீடுகள் குறித்தான இணக்கப்பாட்டு அரசியலை முன்னகர்த்த அவை தவறவில்லை என்கிற செய்தியும் கவனிக்கத்தக்கது.

இலங்கைக்கு அமெரிக்கா வழங்கும் ஜி.எஸ்.பி. சலுகையை மீளாய்வு செய்வதற்கு அதன் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களிற்கான வர்த்தகப் பிரதிநிதி மைக்கல் டெலேனி, கடந்த மாதம் 13ஆம் திகதி இலங்கை சென்றிருந்தார்?.

இம் மீளாய்வின் வெளிப்பாடாக, இச்சலுகையானது எதுவித மாற்றமுமின்றத் தொடரும் என்கிற வகையில் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி றொன்கேர்க் அவர்கள் 29ஆம் திகதியன்று தெரிவித்த செய்தியினை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிச்சாத் பதியுதீன் வரவேற்றிருந்தார்.

ஆகவே இச்சலுகை நீடிக்குமா அல்லது நிறுத்தப்படுமாவென்று பதட்டத்தில் இருந்த அரசிற்கு, றொன் கேர்க்கின் ஆறுதல் செய்தி மகிழ்வைக் கொடுத்திருக்கும்.

இவை தவிர பியகமவில் அமைந்திருக்கும் கொக்ககோலா தொழிற்சாலைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட தூதுவர் பற்றீசியா ஏ.புரெனிஸ் பசுமைத்தரம் காண விரும்பியதாகவும் செய்திகள் வந்தன.

அரசியல் பார்வை

இதயச்சந்திரன்

ஆகவே அமெரிக்க நகர்வுகள் யாவும், சீனாவின் முதலீட்டு மற்றும் கேந்திர நலன்களை இலங்கையில் எவ்வாறு மட்டுப்படுத்துவது என்கிற வகையில் அமைவதைக் காணலாம்.

இந்நிலையில் மனித உரிமை மீறல் என்கிற சர்வதேசப் பிரம்பை உயர்த்தியவாறு, தனது நலனைச் சாதிக்க முனையும் அதேவேளை சிங்களத்தோடு குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நல்லிணக்கமொன்றினை எவ்வாறு ஏற்படுத்தலாமென்கிற அறிவுரைகளை கூட்டமைப்பிற்கும் உலகத் தமிழர் பேரவைக்கும் கூற அமெரிக்கா முற்படுவது போல் தெரிகிறது.

தென்னாபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட நல்லிணக்க திட்டங்களையும் அதன் அனுபவங்களையும் இலங்கைப் பிரச்சினையோடு பொருத்திப் பார்த்து, ஒரு விதமான சமரசத்தினை ஏற்படுத்தி விடலாமென சிலர் கற்பிதம் கொள்கிறார்கள்.

ஆனாலும் சீனா என்கிற ஆசியாவின் பெருஞ் சக்தியை தனது நிரந்தர நண்பனாக வைத்திருக்கும் பௌத்த சிங்களப் பேரினவாதம் காணி, காவல்துறை அதிகாரம் கொண்ட மாகாணசபைத் தீர்வினைக் கூட தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்போவதில்லை என்பதை அவர்களின் அண்மைக்கால வாக்குமூலங்கள் உணர்த்துகின்றன.

இதில் வேடிக்கை என்னவென்றால், 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள காணி, காவல்துறை மற்றும் நிதி குறித்தான அதிகாரங்களின் தலைமையாளராக அதனைக் கட்டுப்படுத்தும் சக்தியாக 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக எல்லாம் வல்ல மகிந்த இராஜபக்சவே இருக்கிறார் என்பதை நல்லிணக்கம் பற்றி பேசும் புலம்பெயர் அமைப்புகளின் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பௌத்த சிங்களப் பேரினவாதம் காணி, காவல்துறை அதிகாரம் கொண்ட மாகாணசபைத் தீர்வினைக் கூட தமிழ்பேசும் மக்களுக்கு வழங்கப்போவதில்லை என்பதை அவர்களின் அண்மைக்கால வாக்குமூலங்கள் உணர்த்துகின்றன.

ஆகவே அமெரிக்காவை விட்டால் வேறு வழியென்ன? என்று அரசியல் மேதாவிகள் போல் கேள்வி எழுப்புபவர்கள் நிலத்திற்காக இன்னும் போராடும் தாயக மக்களிடமிருந்து இக்கேள்விக்கான பதிலைப் பெற்றுக் கொள்ளலாம்.

அண்மையில் நிகழ்ந்த தொலைக்காட்சி நேர் காணலொன்றில் உலகத் தமிழர் பேரவையானது, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், தமிழீழ மக்கள் பேரவை மற்றும் கூட்டமைப்போடு பேசிக் கொண்டிருப்பதாகவும், அவர்களோடு பொதுக் கருத்தொன்று எட்டப்பட்டவுடன் சர்வதேச பிரகடனம் ஒன்று விரைவில் வெளியிடப்படுமென்று இமானுவல் அடிகளார் கூறியிருந்தார்.

இருப்பினும், முதற்படியாக அதிகாரமற்ற மாகாணசபையை ஏற்றுக்கொண்டு அமெரிக்க-இந்திய உதவியோடு மேலும் பல படிகளில் ஏறிச் செல்லலாம் என்கிற கதையாடல்களை விடுத்து, தாயக தமிழ் பேசும் மக்கள், தமிழ் நாட்டில் வாழும் இலட்சக் கணக்கான ஈழ ஏதிலிகள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் ஈழமக்கள் அனைவரையும் இணைத்து அவர்கள் விரும்பும் அரசியல் தீர்வு என்ன என்பதற்கான பொதுஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டுமென்கிற சர்வதேச பிரகடனத்தை முன் வைத்தால் சிறப்பாக இருக்கும்.

புலம்பெயர் நாடுகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள் வாக்கெடுப்பில், மக்கள் அளித்த தீர்ப்பினை உலகத் தமிழர் பேரவை கருத்தில் கொள்ள வேண்டும்.

புலம் பெயர் அமைப்புக்கள் முன் வைக்கும் எந்த அரசியல் தீர்வும் மக்கள் ஆணையைப் பெற்றிருக்க வேண்டும் என்பதனை மறுதலிக்காமல் இவ்வமைப்புகள் செயற்படுதல் நன்று.

Come Directly to a...

TAMIL SPEAKING BARRISTER

For expert legal advice & represenation in Criminal and Immigration law

Criminal Litigation
- Money Laundering
- Serious Fraud
- VAT / Tax investigations
- Confiscation & proceeds of crime
- Appeals against conviction and sentence.
- Regulatory / Health & Safety Investigations

Immigration
- Nationality
- Asylum
- EU Law
- Visas (Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)
- Judicial review

அனைத்து சட்ட ஆலோசனைகளுக்கும்...

Services Includes:

Flexible consultancy times & police station representation can be arranged(24 hours).

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

For Appointments
Contact: 07837 450397
Email: mganesan@furnivallaw.co.uk

Chambers:
Furnival Chambers, 32 Furnival Street, London, EC4A 1JQ.

Muthupandi Ganesan
முத்துப்பாண்டி கணேசன்
LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)
Barrister-at-Law [Direct Access]

ஒரு பேப்பர் - எட்டு ஆண்டுகள்..!

எட்டு வருசத்துக்கு முந்தி ஒரு பொடியன், வேலைய முடிச்சிட்டு, பஸ்சில ஏறுவதுக்கு விழுந்தடிச்சு ஓடிப்போய் பஸ்சைத் தவறு விட்டு, பிறகு மற்ற பஸ்சுக்காகக் காத்துக் கிடந்த போது அவனுக்கு தோன்றினதுதான் இந்த ***ஒரு பேப்பர்*** அடிக்கிற ஐடியா. இப்ப அந்தப்பெடியன் வளர்ந்து மனுசனானது போல் ஒரு பேப்பரும் வளர்நதிருக்கிறது. வளர்ந்துட்டுது என்று சொன்ன உடனை ஏதோ ரூபர்ட் மேர்டக் இன் மீடியா சாம்ராச்சியம் என்று தவறாக விளங்கிக் கொள்ள வேண்டாம். ஏதோ மாவரிக்கப் பயன் பட்டுதோ, மீன்பொரியலிலையிருந்து எண்ணை உறிஞ்சப் பாவிக்கப்பட்டதோ, அப்பம் சுட்டுப் போட பாவிக்கப்பட்டதோ (மெய்யாகவே இப் பிடி ஒரு அக்கா சொன்னவ). லண்டனிலை எல் லாருக்கும் தெரிஞ்ச ஒரு பேப்பராக இருக்குது. இதாலை சில வேளை அங்கிள் சாம் போன்ற பெரிய பெரிய இடங்களிலையிருந்தும் போன் கோல்கள் வருது.

சரி எட்டுவருசமாய் பேப்பர் அடிக்கிறது என்ன பெரிய விசயம், மற்றாக்கள் பத்துப் பதினைஞ்சு வருசமாய் மணியாய் பஞ்சாங்கம் போலை பேப்பர் நடத்தேல்லையோ எண்டு கேட்கப் படாது. ஏனெண்டால் அவையள் எல்லாம் பென் னாம் பெரிய ஆட்கள். ஊடகத்துறையை கரைச்சு குடிச்சாக்கள். நாங்கள் அப்பிடியே?

விசயம் தெரிஞ்ச ஆட்கள், இவனுகள் தமிழை கொலை செய்யிறாங்கள், இலக்கண சுத்தமாய் எழுதிறாங்கள் இல்லை எண்டு நெடுக குறை படக் கூடாது, நாங்கள் ஒரு பக்கமாய் இருந்து பேப்பர் அடிச்சிட்டுபோறம். நீங்கள் இலக்கணச் சுத்தமான பேப்பருகளை வாசியுங்கோ.

தொடங்கேக்க 32 பக்கத்தில தொடங்கி பிறகு 42 பக்கத்துக்குப் போய் பிறகு 52 பக்கமாகி பரந்து நின்றவேளையிலைதான் உலகத் தமிழ ரையெல்லாம் உச்சந்தலையில் அடித்து உறைய வைத்த முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்தது அதிலை நாங்களும் தான் கலங்கிப் போய் வழிதெரியாமல் சிலகாலம். முடங்கிப் போயிட்டம். ஆனால் முடக்கமே முடிவாகிப் போயிடக் கூடாது எண்டதற்காகவும் ஏதோ பம்ப லுக்காக தொடங்கிய ***ஒரு பேப்பர்*** சனங்களிட்டை ஏற்படுத்தின தாக்கத்தையும் அதனாலை எங்களிட்டையும் சில பொறுப்புக்கள் இருக் கெண்டும் புரிஞ்சு கொண்டம் அதாலை மீண் டும் 20 பக்கத்திலை தொடங்கி இப்ப 32 பக்கத் திலை வந்து நிக்கிறம். ஆரம்பத்திலை லண்ட னுக்கு எண்டு மட்டும் தான் தொடங்கினம். பிறகு எங்கட விலாசத்தை எட்டிக் கனடா பிரான்ஸ் சுவிஸ் எண்டும் காட்ட வேணும் எண்ட ஆசை வந்து போய் விலாசமும் காட்டினம். இப்ப திரும் பவும் இலண்டனுக்குள்ளையே வந்திட்டம். அது முன்னையதை போல 50 அல்லது அதுக்கும் கூடுதலான பக்கங்களோடு பரந்து நிற்பது வாசகர்களின் கைகளிலும் முக்கியமா விளம்பர தார்களின் கைகளிலுமே உள்ளது.

இந்த எட்டு வருசத்தைத் திரும்பிப் பாக்கிற போது எத்தனபேர் வந்தவையள். எத்தனை பேர் போனவையள். எத்தனை பேர் இண்டை வரைக் கும் நிண்டு பிடிக்கினம். இப்பிடி ஒரு ஆயிரம் கதையள் சொல்லாம்.

ஒரு பேப்பர் தப்பாமல் இரண்டு கிழமைக்கு ஒருக் கால் உங்கடை கைக்கு வருகிறது எண்டால் அந்தக் கைங்கரியத்தை செய்து முடிக்கிற ஆக்களைப்பற்றி கொஞ்சம் சொல்லவேணும்..

முந்தி எழுதிய ஆட்களிலை சிலர் இப்ப எழுதி றதை நிறுத்தியிட்டாலும், வேல் தர்மா, ச.ச. முத்து, மௌலி, சுபேஸ் எண்டு புது ஆட்கள் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். மட்டைக்கிளப் பான், உமா மகாலிங்கம், மாசிலாமணி, பா.வை. ஜெயபாலன் ஆகியோர் தொடர்நதும் சளைக் கமால் எழுதி வருகிறார்கள். சாத்திரியின் எழுத்துக்கு உங்கிளிடத்திலை தனியான ஆர் வம் இருக்கிறது. (கூடவே வேண்டாத வில்லங் கங்களையும் இணைப்பாக எங்களுக்கு தந்திருக்கிறார்)

ஒரு பேப்பர் ஐ வளர்த்தெடுக்கிறதுக்கு இரவி யண்ணை செய்த பணிகள் பல. அவர் எங்களி டமிருந்து சற்று விலகியிருந்தாலும் நாங்கள் அவரை விடுறதாய் இல்லை.

இத்தோடு நின்று விடவில்லை பணியகத் தில் குவிந்துகிடக்கும் வேலைகளையும், விளம் பரதாரங்களுடனான தொடர்பாடல்களை கச்சி தமாக செய்து முடிக்கிற சோபனா, அஜந்தா.. எதைச் சொன்னாலும் அசாத்திய வேகத்தில் செய்து முடிக்கிற மயூரன், மதி சாரங்கன்.... பேப்பர் விநியோகத்தில் உதவுகிற பிரகாஸ், உதயகுமார், சிவகுமார்.... கணக்கு வழக்கிலை நாங்கள் கவனக்குறைவாயிருந்தாலும் அதை சீர்திருத்தி Company houseஐ திருப்திப்படுத்திற மீரா அக்கா.....

எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாவிதமான உதவிகளையும் செய்கிற பாலா அண்ணா, குருநாதன் அண்ணா..

ஐயோ, வேறை யாரையும் விட்டுட்டமோ தெரி யாது .. ஆனால், இவர்கள் இல்லாமல் ***ஒரு பேப்பர்*** இல்லை.

அடிச்சம். அடிச்சுக் கொண்டும் இருக்கிறம். இது நாங்க எங்கெங்க ஒரு பேப்பர் அடிக்கிறம் எண்ட விபரம். யார் எங்களோட வேலை செய் யினம் எங்களுக்காக வேலை செய்யினம் எண் டெல்லாம் விபரம் இருக்கு. ஆனால் இப்பிடி ஒவ் வொண்டுக்கும் ஒவ்வொரு கதையா சொல்ல வெளிக்கிட்டா விடியும். சும்மா பாருங்கோ முகப் புப் பக்கத்துப் படத்தில இருந்து முடிவுப் பக்கம் வரைக்கும் ஒவ்வொருத்தரின்ர பங்களிப்பை யும் சொல்ல வெளிக்கிட்டா இந்தப் பேப்பர் காணுமே?

'தம்பிமார் பேப்பர் அடிக்கிறயள் ஆனால் எங்கை வைக்கிறியள் ஒரு இடமும் காணேல்லை' எண்ட குற்றச்சாட்டுகள் இன்றைக்கு வரைக்கு வந்து கொண்டிருக்கும். எல்லாருக்கும் கிடைக் கிறமாதிரி எப்பிடி விநியோகிக்கிறது எண்ட ரெக் னிக் எங்களுக்கு பிடிபடுதில்லை. ஒரு வேளை நாங்கள் இந்த விசயத்திலை வீக்காய் இருக் கிறமோ தெரியாது.

உண்மையச் சொல்லப் போனால் எட்டு வருசம் உருண்டு ஓடிப் போட்டுது. ஆனால் நாங்கள் உந்தப் பத்திரிகை விசயம் அதின்ர இலக்கணம் வரைவிலக்கணம் எண்டு ஒரு மண்ணும் தெரியாமத்தான் ஓடிக் கொண்டு இருக்கிறம். அதைவிட சத்தியமா அந்த விச யங்களில அக்கறையும் இல்லை எமக்கு! ***ஒரு பேப்பர்*** உங்களை மகிழ்வித்துதோ, அறிவூட்டி யதோ, அல்லது இரத்த அழுத்தத்தை கூட் டியதோ நீங்கள் இல்லாமல் நாங்கள் இல்லை எண்டது மட்டும் உண்மை.

IMMIGRATION SPECIALISTS

Shalini V Bhargava ஒரு தகுதியும் அனுபவமும் UK குடிவரவு சட்டங்களில் திறமையும் பெற்றதொரு சட்டத்தரணி ஆவர். நேர்மையானதும் ஒளிவுமறைவுமற்ற சேவையை அளித்தல் அவசியம் என ஷாலினி நம்புகிறார்.
வாடிக்கையாளர்களின் திருப்தியே தனக்கு வெற்றிதரும் என நம்புகிறார்.

Aschfords Law can offer assistance in the following areas of UK Immigration Law:

- VISITING THE UK
- SETTLING IN THE UK
- BRITISH CITIZENSHIP
- APPEALS
- FAMILY REUNION
- HUMAN RIGHTS
- DOMESTIC WORKERS
- CO-HABITATION
- MARRIAGE
- ELDERLY DEPENDENT RELATIVE
- CARER IN PRIVATE HOUSEHOLD
- ENTRY CLEARANCE
- POINTS-BASED SYSTEM
  Tier 1 – Highly skilled workers extensions, Entrepreneurs, Investors, Post Study Work
  Tier 2 – General, Minister of Religion, Sportsperson, Intra-Company Transfer
  Tier 4 – Student Visas, extension applications, switching
- SPONSOR LICENCING FOR EMPLOYERS AND INSTITUTIONS

தமிழில் விசேட சட்ட ஆலோசனை சனிக்கிழமைகளில் காலை 10.00 முதல் பிற்பகல் 13.00 வரை நடைபெறும். (By appointment only)

FREE 15 MINUTE CONSULTATION

Tel : 020 3586 4050 | Mob : 07582932830

ASCHFORDSLAW
Solicitors and Commissioners for Oaths

79 College Road, Harrow, Middlesex, HA1 1BD
Closest tube station: Harrow-on-the-Hill (Metropolitan Line)
LEGAL SERVICES WITH A PERSONAL TOUCH
www.aschfordslaw.com
Email: info@aschfordslaw.com
Authorised and regulated by the Solicitors Regulation Authority

கோடை கால சுருட்டல்!!

சாத்திரி

ஒரு பேப்பர்

கோடை காலக் கொண்டாட்டம் குளு குளு ஊட்டி செல்லவேண்டுமா? பழனியில் மொட்டை போடவேண்டுமா திருப்பதியில் நாமம் போடப் போகிறீர்களா? அழையுங்கள் குளோபல் ஏயார் ரவல்ஸ் நிறுவனம்.. அல்வா சாப்பிட ஆசையா? திருநெல்வேலிக்கே அழைத்துச் செல்கிறோம் அது மட்டுமல்ல தமிழ் நாட்டில் கோயில்களை தரிசனம் செய்யவும். ஊருக்கு உறவுகளை பார்க்க போகவும். இந்தியா மற்றும் இலங்கைக் கான ரிக்கற்றுக்களை குறைந்த விலையில் நிறைந்த சேவை செய்யக் காத்திருக்கிறார்கள் சவுத் ஹரோ பகுதியில் உள்ள நோத்தோல்ட் வீதியில் (Northolt Road) வீதியில், முன்பு தபாலகம் அமைந்திருந்த கட்டிடத்தில் அமைந் துள்ள குளோபல் ஏயார் ரவல்ஸ் நிறுவனத்தினர். இப்படியொரு விளம்பரத்தை இலண்டன் தமி ழர்கள் கடந்த காலங்களில் கேள்விப் பட்டிருப் பீர்கள். இப்படி விளம்பரத்தை பார்த்த பலர் குளோபல் ரவல்ஸ் நிறுவனத்திற்கு போய் இலங் கைக்கும் இந்தியாவிற்கும் பயணச் சீட்டுக்கள் விலையை அதன் உரிமையாளர் சேகரிடம் கேட் கிறார்கள் நம்பமுடியாத ஆச்சரியம் என்ன வெனில் மற்றைய நிறுவனங்களை விட சுமார் 100 பவுண்சுகள் மலிவில் இவர் பயண சீட் டுக்களை பெற்றுக் கொடுக்கிறார். பயண சீட்டை பெற்றவர்கள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் போய் திரும்புகின்றனர். அவர்களிற்கோ அள விட முடியாத மகிழ்ச்சி றவல்ஸ் எண்டா இப் பிடியல்லோ இருக்க வேணும் என்ன மலிவு.. மற்றவங்களும் ரவல்ஸ் நடத்துறாங்கள் கள்ள பயலுகள் சனத்திட்டை கொள்ளையடிக்கிறாங் கள் என்று மற்றய பயண முகவர்களை திட்டி விட்டு தங்கள் உறவுகள் நண்பர்கள் என்று வாய் காது வழியாக குளோபல் ரவல்ஸ்சின் அருமை பெருமைகள் இலண்டனில் மெல்ல பரவத் தொடங்குகின்றது.

இந்தக் கோடை கால விடுமுறைக்கு இலங்கை இந்தியா செல்வதற்காக பலர் முண்டியடித்து முற்பதிவுகளை குளோபல் ரவல்ஸ் நிறுவ னத்தில் மேற்கொள்கிறார்கள். இப்பொழுது தான் நிறுவனத்தின் உரிமையாளர் சேகர் இன் னொரு புதிய திட்டத்தினை அறிவிக்கின்றார். அது என்னவெனில் வர்த்தக வியாபார நிறு வனங்களை நடத்தும் தனது வாடிக்கையாளர் களிடம் நீங்கள் பத்து பேரை எனக்கு வாடிக் கையாளராக்கி கொடுத்தால் உங்களிற்கு ஒரு பயணச் சீட்டு இலவசம் இதுதான் திட்டம். வியா பாரிகளோ வெண்ணை தின்னக் கூலியா என்று புழுகத்துடன் குளோபல் ரவல்சின் மலிவுவிலைத் திட்டத்தை தங்களின் வாடிக்கையாளர்களின் மனதில் ஆசைகளாக்கி அவர்களை பயண சீட்டு பதியவைத்து விடுகிறார்கள். இது இப்படி நடந்து கொண்டிருக்க இலண்டனில் உள்ள அம்மா பகவானின் தரகர் (இவர்களை இப்படித் தான் அழைக்கலாம் பக்தர் என்பது உண் மையான பக்தர்களை கேவலப்படுத்திவிடும்) ஒருவரிற்கும் மலிவுவிலை விளம்பரம் கிடைத்து விட இந்த வருட கோடைக்கு ஆந்திராவிற்கே நேரே போய் அம்மா பகவானிடம் ஆசிகள் வாங்குவதற்காக 40 பேர் கொண்ட ஒரு கும்ப லையும் தயார்பண்ணி பயண சீட்டும் பதிவு செய்து விட்டார். இவரிடம் பதிவுகள் செய்பவர் கள் அனைவரிற்கும் சேகர் மின் பயண சீட்டு கொடுத்து விடுவார்(e -ticket).

இப்படியாக கோடைகாலத்து பயண பதிவு கள் வேகமாக பதிவுகள் முடிவிற்கு வந்து கொண்டிருக்கும் சமயம் குளோபல் ஏயார் ரவல் சில் பயண பதிவு செய்த ஒருவர் தமிழ்நாட்டில் வேண்டுதல் வைத்த கோயிலிற்கு போவதற் காக நேர்த்திவைச்சு முடிஞ்சுவைச்ச காசையும் எடுத்துக்கொண்டு மனைவி பிள்ளைகளுடன் விமான நிலையத்திற்கு போய் தங்களுடையை கடவுச் சீட்டையும் பயண முகவர் வழங்கிய மின் பயண சீட்டையும் நீட்டுகிறார் குறித்த விமானத் திற்கு அனுமதி சீட்டு வழங்குபவர் கணணியில் கடகட வென்று தட்டியவர் நெற்றியை சுருக்கி கணணியை உற்று பார்த்துவிட்டு மீண்டும் கட கடவெ ஏதோ தட்டினார் அவருக்கு ஒன்றும் புரியவில்லை மேலதிகாரி ஒருவரை அழைத்து மின் பயண சீட்டையும் கணணி திரையையும் காட்டி எந்த பதிவையும் காணவில்லை யென்கி றார். அந்த அதிகாரி வேறு தன் பங்கிற்கு மீண் டும் கணணியில் தட்டிவிட்டு பயணியிடம் மன் னிக்கவும் உங்கள் பெயரில் எந்த பதிவுகளும் இல்லை என்கிறார். பயணிக்கோ கோபம் தலைக் கேற என்ன விளையாடுறீங்களா? நேத்திக்கடன் வேறை வைச்சிருக்கிறன் போகாமல் விட்டால் சாமி குற்றமாயிடும் மரியாதையாய் என்னை பிளேனிலை ஏத்துங்கோ எண்டு சத்தம் போடவே அந்த அதிகாரியோ நீங்கள் சத்தம் போடவேண்டியது உங்களிற்கு பயண சீட்டு பதிவு செய்தவரிடம் இங்கு அல்ல என்று சொல்லி அனுப்பி விடுகிறார்கள். அந்த நபரும் விமான நிலையத்திலிருந்து நேராக குளோபல் ரவல்ஸ் சிற்கு வந்து எம்பிக் குதிக்க அவரை சமாதானப் படத்திய சேகர்.. அண்ணை எங்கையோ பிரச் சனை நடந்திட்டுது நாளைக்கு வாங்க சரி பாத் திட்டு கட்டாயம் இன்னொருரிக்கற்தாறன் என்று சமாதானப் படுத்தி அனுப்பி விடுகிறார். மறு நாள் ரிக்கற் கிடைக்கும் என்று நம்பி வந்தவ ரிற்கு அதிர்ச்சி கடை இழுத்து சாத்தப்பட்டிருந் தது அங்கு வேறு தமிழர்களும் காவல் நின்ற னர் போனடித்து பார்த்தார்கள் இந்த இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது என்று அழகான பெண் குரொலன்று ஆங்கிலத்தில் சொன்னது. அதன் பின்னர்தான் விடயம் மெல்ல மெல்ல வெளியே வரத் தொடங்கியது.

சேகரால் குறைந்தது 200ற்கு மேற்பட்டவர் கள் ஏமாற்றப்பட்டிருந்தார்கள். இவர் ஆரம்பத் தில் வாடிக்கையாளர்களை கவர்வதற்காகவே தன்னுடைய பணத்தில் ஒரு பகுதியை போட்டு மிக குறைந்த விலையில் பயணசீட்டுக்களை இலண்டனில் உள்ள பிரபல தமிழ் பிரயாண முக வரிடம் பெற்று கொடுத்திருக்கிறார். அப்படி மலிவு விலையில் இலங்கை இந்தியா போய் வந்தவர்கள் மூலமாக அடுத்த வலையை வரித்திருக்கிறார். அவர் எதிர் பார்த்த அளவிற்கு ஏமாந்தவர்கள் மாட்டியிருக்கிறார்கள். பயண சீட்டுக்களின் கழிவு என்பது ஒரு முகவரை விட மற்றையவர்களால் மிஞ்சிப் போனால் ஆகக் கூடியது 30 பவுண்சுகளோ அல்லது ஈரோக்க ளோதான் குறைக்க முடியும் அதற்கு அதிகமாக அதுவும் 100 பவுண்சுகள் மலிவு என்றால் கொஞ் சாமது யோசிக்க வேண்டும்.

சேகர் தன்னிடம் பயண சீட்டு பதிவு செய்தவர்களிற்கு இந்தியாவிற்கு போகமலேயே மொட்டையும் போட்டு நாமமும் இழுத்து அல்வாவும் கொடுத்துவிட்டார். இந்த அம்மா பகவான் கோஸ்டிகள் என்ன செய்யப் போகினம் எண்டுதான் தெரியேல்லை.

பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் இணைந்து தற்சமயம் சேகர் என்பவரிற்கு எதிராக சட்ட நட வடிக்கையில் இறங்கியுள்ளனர். மேலும் பாதிக் கப்பட்டவர்கள் 0845 4040 506 என்கிற இலக்கத் துடன் தொடர்புகளை ஏற்படுத்தி உதவிகளை பெற்றுக்கொள்ளலாம். கடைசியில் சேகர் தன் னிடம் பயண சீட்டு பதிவு செய்தவர்களிற்கு இந் தியாவிற்கு போகமலேயே மொட்டையும் போட்டு நாமமும் இழுத்து அல்வாவும் கொடுத்து விட்டார். இந்த அம்மா பகவான் கோஸ்டிகள் என்ன செய்யப் போகினம் எண்டுதான் தெரி யேல்லை. வழமைபோல் skypeல் தரிசனத்தை காண வேண்டியதுதான்.

தீ சுமந்த நாள்....!!!

இமயமாய் வளர்ந்து
முன்னே நின்று எக்காளமாய்
அதிரக் கனைக்கும் எதிரிப்படை.
என்ன செய்வதென்று புரியாத
கைபிசைவு.
இத்தருணம் கைமாறின்
எல்லாம் தலைகீழ் ஆகும் –
அத்தருணம் ஆரும் அறியாதபடி
கூடி ஓரிடத்தில் வளர்ந்தவர்க்கும்
பழகிச் சிரித்தவர்க்கும் கூட
போகும் செய்தி சொல்லாமல்
போவாராம் இவர்.

எல்லாம் அறிந்தும்,
இவர்களுடன் ஒருநாள்
ஒன்றாய் முழுநாளும் இருந்து,
முகங்களிலும் அகங்களிலும்
உறைந்து, தென்றல் அணைத்த
விதமாக
விரல்கள் தழுவி அன்பால் நனைந்து
விடைபெறும் எல்லோருக்குமான
தாயுள்ளம்.
உள்ளே உருகி வெளியே இரும்பாகி
சொன்ன செயல் முடிக்கும் கணம்
வாய்மொழியும் மந்திரங்கள் கெட்டு
இதயம் உடைந்ததை
யார்க்கும் உணர்த்தாது நிற்பார்.

அண்ணனைக் காப்பாற்றுங்கள் ––
அதிர்வுகளின் உள்ளிருந்தும்
இவர்கள் வாயொலிக்கும்.
ஊனக் கண்களுக்கு எட்டிவிடா
உத்தமர்கள்
எம்மகத்தின் வீதிகளில்,
வையத்தில் எங்ஙனுமே
நாற்றிசை ஆளும் நாயகராய்
நிற்பா!;

மடிசுமந்த தாயும்
தன்பிள்ளை போயடைந்த
கணமறியாள்.
எமக்காய் தாமழிதல் முறையாம்
தமக்காய் நாமழுதல்
முறையிலையாம்
சொல்லும் இம்மாமுனிகள் வேதங்கள்
உள்ளம் இருப்பவரை
உறையவைக்கும்
என்ன பணிசெய்து இவர் கடன்
தீர்ப்போம் இனி!

ஹேமரஞ்சி

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்
உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals
- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

இந்தியாவும் சிவ் சங்கர் மேனனும் சொல்வது வேறு! செய்வது வேறு!!

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

2009 மே மாதத்திற்கு முன்னர் இலங்கையில் போர் நடந்துகொண்டிருக்கும் போது சிவ்சங்கர் மேனனனும் எம் கே நாராயணனனும் அடிக்கடி கொழும்பு சென்று இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடாத்துவதாகச் செய்திகள் வரும். அச்செய்திகளில் அவர்கள் இலங்கை இனப் பிரச்சனைக்கு போர் மூலாமாகத் தீர்வு காண முடியாது என்று கூறவும் போர் நிறுத்தத்தை வலியுறுத்தவும் செல்வதாகக் கூறப்படும். ஆனால் இலங்கையின் இன அழிப்புப் போரில் சிவ்சங்கர் மேனனும் எம் கே நாராயணனும் மிக முக்கிய பங்காளிகள் ஆவார்கள். இவர்கள் இலங்கைக்குப் பயணங்கள் மேற்கொண்டமை இலங்கையின் இன அழிப்புப் போரில் எப்படி இந்தியா உதவி செய்ய வேண்டும் என்பதைப் பற்றி ஆராயவும் இன அழிப்புப் போர் நடந்து கொண்டிருக்கும் முறைமை பற்றி மீளாய்வு செய்யவும் ஆலோசனை வழங்கவுமே. ஒரு கட்டத்தில் அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களைக் கருத்தில் கொள்ளாமல் போரை நடாத்தி இந்தியப் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுங்கள் என இவ்விருவரும் சொல்லியதாகக் கூடச் செய்திகள் வெளிவந்தன.

■ சோனியா குடும்பத்தின் பாதுகாப்பு

இந்தியப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதில் சோனியா காந்தியின் அரசு முனைப்புக் காட்டியமைக்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. 2009 மே மாதம் நடந்த இந்தியப் பாராளமன்றத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி தோல்வியடைந்தால் அதன் பின்னர் வரும் அரசு சோனியா குடும்பத்தினருக்குப் போதிய பாதுகாப்பு வழங்காவிடில் அவர்களின் உயிருக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து ஏற்படலாம் என்பதால் தேர்தலுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட திட சங்கற்பம் பூணப்பட்டது. போருக்குப் பின்னர் இந்தியா இலங்கை அரசு மேற்கொண்ட இன அழிப்புப் போரில் புரிந்த போர்க் குற்றம் தொடர்பான தனது செய்மதிப் படங்களைக் காட்டி இலங்கையை மிரட்ட முற்பட இலங்கை பதிலுக்கு தம்முடன் இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி உரையாடல்களின் ஒலிப்பதிவுகளைப் பதிலுக்குக் காட்டி இவையும் போர்க்குற்றத்திற்கு உடந்தையாக இருந்தமைக்கான ஆதாரங்கள் என்று மிரட்டி இந்தியாவைப் பணிய வைத்தது. இதனால் தான் 2009ம் ஆண்டு நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கழகக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா இலங்கைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமாக மாற்றியது. அது மட்டுமல்ல 2012 மார்ச் மாதம் நடந்த கூட்டத் தொடரில் அமெரிக்காவை அடுத்து நிற்பது போல் நடித்து அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தின் கடும் போக்கை குறைத்து இலங்கைக்குச் சாதகமாக்கியது.

■ கருணாநிதியை சந்தித்த மேனனும் நாராயணனும்

2009 மே மாதத்திற்கு முன்னர் சிவ்சங்கர் மேனனும் எம்.கே. நாராணனும் இலங்கை செல்லு முன்னர் அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த கருணாநிதியைச் சந்திப்பதும் உண்டு. அப்போது வெளிவரும் செய்தி இலங்கையில் போர் நிறுத்தம் தொடர்பாக கருணாநிதியுடன் கலந்து ஆலோசித்ததாக இருக்கும். ஆனால் உண்மையில் இலங்கையில் தமிழர்கள் அழிக்கப்படும் செய்தியால் தமிழ்நாட்டில் கொந்தளிப்பு ஏற்படாமல் செய்திகளை முடி மறைப்பது, கொந்தளிப்பைத் தடுப்பது, மக்களைத் திசை திருப்புவது எப்படி என்பது பற்றியே இருக்கும்.

■ செய்தி வேறு உண்மை வேறு

இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தைப் பொறுத்தவரை இந்தியா சொல்வதும் செய்திகளாகக் கசிய விடுவதும் வேறு அதன் உண்மை நிலைப்பாடு வேறு. இந்தியாவின் இப்போதைய உண்மையான திட்டம் வடக்கிலும் கிழக்கிலும் சிங்களவர்களைக் குடியேற்றி அங்கு தமிழர்களின் தேர்தல் வாக்கு பலத்தைக் குறைத்து அவர்களை மலையகத்தில் வாழும் தமிழர்கள் போல் ஆக்குவதுதான். இதன் பின்னர் எந்த ஒரு நாடும் இலங்கைத் தமிழர் பிரச்சனையை முன் வைத்து இலங்கையில் தலையிடாது. இதைச் செய்வதே இந்தியாவின் நோக்கமாகும்.

■ சிவ் சங்கர் மேனனின் பரம்பரைத் தொழில்

இந்தியாவை ஒரு பரம்பரை ஆண்டு கொண்டிருக்க இன்னொரு பரம்பரை அந்த ஆளும் பரம்பரைக்கு ஆலோசனை சொல்லிக் கொண்டிருக்கிறது. சிவ் சங்கர் மேனனின் தாத்தா ஜவஹர்லால் நேருவிற்கு நெருக்கமானவர். சிவ் சங்கரின் தந்தை தந்தையின் சகோதரர் இப்படி இவர்கள் பரம்பரையும் இந்தியாவில் உயர் பதவிகளில் இருந்தார்கள். இக்குடும்பம் சீனாவிற்கு நெருக்கமானது என்று கூறப்படுகிறது. சிலர் இவர்களைச் சீனக் கைக்கூலிகள் என்றும் கூறுவர். ஜீபார்த்தசாரதி இந்திரா காந்தியின் ஆலோசகராக இருந்த போது இலங்கையில் அமெரிக்க ஆதிக்கம் ஏற்படாமல் இருப்பதில் அதிக அக்கறை காட்டி வெற்றி கண்டனர். சிவ்சங்கர் மேனன் புது டில்லியின் ஆலோகராக இருக்கும் போது சீனா இலங்கையில் தனது ஆதிக்கத்தை வலுவாகக் கட்டியெழுப்பி வருகிறது.

சிவ் சங்கர் மேனனின் பயணம்

29-06-2012 இன்று சிவ் சங்கர் மேனனின் 24 மணித்தியால இலங்கைப் பயணம் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் இலங்கை அரசு செய்யும் இழுத்தடிப்புக்கள் மீதான இந்தியாவின் அதிருப்தியை இலங்கைக்கு கடும் தொனியில் தெரிவிக்கவே என்று செய்திகள் வெளிவந்தன. இந்தச் செய்தியின் உண்மைத் தன்மையை நாம் பார்க்க வேண்டும். பிரேசில் ரியோ நகரில் நடந்த G-20 மாநாட்டின் பின்னர் இலங்கை அதிபர் மஹ்ந்த ராஜபக்சவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் சந்தித்த போது இந்தக் 'கடும் தொனி' செய்தியை தெரிவித்திருக்கலாம். அப்போது தெரிவிக்காததை இப்போது தெரிவிக்க மேனன் இலங்கை சென்றாரா? இலங்கை இனப் பிரச்சனை தொடர்பான கலந்துரையாடல் என்றால் அதற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இலங்கை செல்லாமல் இந்திய தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகரான சிவ் சங்கர் மேனன் சென்றது ஏன்? இந்திய தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகர் சென்றமையால் இப்பயணத்தின் முக்கிய நோக்கம் இந்திய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டமையே அன்றி வேறல்ல. 2012 மார்ச் மாதத்தின் பின்னர் இலங்கை இந்தியாவை ஓரம் கட்டுவதை அதிகரித்துள்ளது. இலங்கை போருக்கு உதவியமைக்கு பிரதி உபகாரமாக போர் முடிந்ததும் இலங்கை இந்திய இருதரப்பு வர்தக உடன்பாடு கைச்சாத்திடுவதாக இலங்கை இந்தியாவிடம் வாக்குறுதி அளித்திருந்தது. இலங்கையிடம் சமர்ப்பிக்கப்பட்ட இந்த உடன்பாட்டில் இதுவரை இலங்கை கையொப்பமிடவில்லை. திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்கு கொடுத்த குத்தகையை இரத்துச் செய்வது பற்றி இலங்கை தீவிரமாக ஆராய்கிறது. பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இந்தியா முன் வந்ததை இலங்கை நிராகரித்து விட்டது. மன்னார் எண்ணெய் வள ஆய்வில் இந்தியா புறக்கணிக்கப்படுகிறது. சம்பூர் அனல் மின்னிலையத்திலும் இந்தியா ஏமாற்றப்பட்டுள்ளது. இப்படி பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்தியாவைப் புறக்கணிப்பதும் சீனாவுடன் உறவை வளர்ப்பதிலும் இந்தியா அதிக அக்கறை காட்டி வருகிறது. இது இந்தியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்பதால்தான் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரான சிவ் சங்கர் மேனன் இலங்கை சென்றார். அவர் அங்கு உண்மையில் பேசியவை தொடர்பான செய்திகள் வெளிவராது.

■ பழைய பல்லவியில் ஒரு புதிய சாகித்தியம்

சிவ்சங்கர் மேனன் தனது வழமையான 'இலங்கைய பிளவு படாத ஒரு நாடாக வைத்திருக்க இந்தியா எப்போதும் உதவும்' என்னும் பல்லவியை இம்முறையும் பாடத் தவறவில்லை. ஆனால் மேனன் இம்முறை தனது வழமையான பாடலிற்குப் புது சாகித்தியத்தை இணைத்துள்ளார். அது இலங்கை தனது மக்களின் மனித உரிமைகளைப் பேணவேண்டும் என்பதே. இது ஹ்லரி கிளிண்டன் அக்காவின் வேண்டு கோளாகத்தான் இருக்க வேண்டும். இந்திய அரசியல் வாதிகள் பாடும் 13இற்கு மேல் சென்று இனப் பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதாக மஹ்ந்த ராஜபக்ச என்னிடம் வாக்குறுதியளித்தார் என்ற பாடலை மேனன் இசைக்கவில்லை. அந்தப் பாடலுக்கான இசையமைப்பும் வரிகளுக்கும் சொந்தக்காரனே மேனன்தான். இந்திய அரசியல்வாதிகளையும் தமிழ்நாட்டு மக்களையும் ஏமாற்ற புதுடில்லியின் தென்மண்டல பூனால் கும்பலும் கொழும்பும் இணைந்து உருவாக்கிய பாடல்தான் '13இற்கு மேல் சென்று இனப் பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதாக மஹிந்த ராஜபக்ச என்னிடம் வாக்குறுதியளித்தார்'.

■ உதவிக்குப் பதில் ஏமாற்றம்

இப்போது இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகளில் இந்தியா சீனாவை முந்திவிட்டது. இந்த ஆண்டில் இந்தியா 740.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இதில் 275.1 மில்லியன் டொலர்கள் நன்கொடையாகும். ஜப்பான் 12.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடை உள்ளிட்ட 175.3 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளது. மூன்றாவது இடத்தில் இருக்கும் நெதர்லாந்து 102.5 மில்லியன் டொலர்களை நிதியுதவியாக அளித்துள்ளது. கடந்த ஆண்டில் முதலிடத்தில் இருந்த சீனா இம்முறை நான்காவது இடத்துக்கு இறங்கியுள்ளது. சீனா இந்த ஆண்டில் 32.5 மில்லியன் டொலர்களை மட்டுமே இலங்கைக்கு வழங்கியுள்ளது. ஆனால் இந்தியாவை ஏமாற்றும் நாடுகள் பட்டியலில் இலங்கை முதலாமிடம் வகிக்கிறது. இதைப் பல சிங்கள அரசியல்வாதிகளும் ஆய்வாளர்களும் தெளிவுபடக் கூறியுள்ளார்கள்.

■ ஏன் இந்தத் தமிழின விரோதி

சிவ் சங்கர் மேனன் இலங்கை செல்கிறார் என்ற செய்தி வந்தவுடன் இந்திய வால்பிடித் தமிழ் ஊடகங்கள் அவர் இலங்கை அரசு தமிழர் பிரச்சனையில் காட்டும் அசமந்தப் போக்குத் தொடர்பாக இந்தியாவின் அதிருப்தியைக் கடுமையான தொனியில் தெரிவிக்கப் போகிறார் என்று செய்திகள் வெளிவிட்டன. இந்திய உளவுத் துறை தினமணியில் இப்படிப் பொய்ச் செய்தியை வேண்டுமென்றே கசியவிட அதை பிரதி செய்து பல இணையத் தளங்களும் தம்மை அரசியல் விமர்சகர்கள் என்று நினைப்போரும் (முள்ளி வாய்க்காலின் பின் முளைத்த காளான்கள்) பிரசுரித்தனர். இலங்கையில் வாழ் தமிழர்களின் மேல் அக்கறை இருந்தால் இந்தியா தமிழர்களின் நலன்களில் அக்கறை உள்ள ஒரு வரை இலங்கைக்கு அனுப்பியிருக்கும். அதை விட்டு தமிழின விரோதியும் தமிழின அழிப்புப் போரின் முக்கிய பங்காளியுமான பாலக் காட்டானை இலங்கைக்கு அனுப்பியது ஏன்?

Sri Lanka: A Game Plan is Emerging

By : Dr Kumar David

The Lankan government quite suddenly and quite unnecessarily dissolved three provincial councils a few days ago. Were you to search for a logical explanation you would find none, but seek for crafty motives and a game plan surfaces. The political climate is hotting up and the regime needs to distract the populace; what better than the drama of the hustings? But this is not explanation enough. The Rajapakse government is panning out, probing options, searching for a survival strategy. You can't say the Rajapakses don't plan ahead with assiduous care, but they have to. By all accounts, and now it seems in their own estimation as well, things are getting tougher by the day, so move before it gets too bad!

This is precarious for society, the government of the day is like a cornered wild animal, it cannot countenance downfall for that will be curtains, kaput literally

And there is a more lethal concern; this government cannot relinquish power and quit office because it will be the jailhouse for some, the hangman's noose for others and investigation by the corruption watchdog for all. This is precarious for society, the government of the day is like a cornered wild animal, it cannot countenance downfall for that will be curtains, kaput literally. But a dictatorial grab for power is the royal road to uprising, carnage and revolution. As in Egypt and Syria there is no way out. In both it is not that the dictators do not wish to renounce power. They cannot! A vast empire of privilege, wealth and positions in the hands of the military are at stake in Egypt, and that's not counting the necks of the mighty, vide Mubarak. If ever Syria's Assad and his murderous henchmen fall into the hands of the mobs, it will be a lynching. Remember Mussolini, they hanged him from a lamppost. Notwithstanding its bungling and bumbling, Indians should be thankful that the rudiments of democratic muddling-through are secure in their country.

■ The game plan

The terms of the North Central and Sabaragamuwa Provincial Councils (PC) expire in September 2013, and the Eastern PC in March. There is no disturbance of the peace, no disruption of law and order, and no anticipated event signalling the fall of any of the three Administrations. There is no rhyme or reason or breakdown; the dissolution comes out of the blue. The game plan is that if Rajapakse's UPFA alliance wins, then parliament will be dissolved in early 2013. The three PC elections are a dry run for the real thing, parliamentary elections. What's the logic for early parliamentary elections in 2013 since the term of the current parliament does not end till 2016? Political speculators suggest that the government knows economic conditions are spiralling down, so it thinks "better hold elections early before everything hits rock bottom. An added benefit is that when the big prize, presidential elections, fall due (January 2016 is the cut-off date) it will be beneficial to have a pliant parliament in situ.

However, there is also a school of thought in Colombo which says the reason for calling early PC elections is that the international community's pressure on war crimes, human rights, reconciliation and devolution has become hard to bear. If the government wins the three provincial elections it will thumb its nose at the rest of the world and say: "The people are with us, we have a mandate to do as we like. Go stuff your UNHRC Geneva resolution! " Although the West is unlikely to fall for this given the degree of intimidation and rigging that has now become routine in Sri Lanka, the Indians, since they are not that intelligent, will fall for the bluff. Shivshankar Menon's pleasure trip to Colombo is the umpteenth such ludicrous jaunt; nothing useful will come of Delhi's policy on Lanka till Manhoman Singh's government packs up, and probably the next lot will be no better.

■ Risk factors

The Eastern Province PC election is a particularly important gamble by the government since the population of this province is roughly 40% Tamil, 35% Muslim and 25% Sinhalese. If the government wins the EP it will crow that not merely the Sinhalese but also the minorities are behind it. There is a risk involved that losing the EP would enable its critics to make counter charges that it has lost minority support. The Tamils and Muslims (essentially the TNA and the SLMC) would be wise to forge alliances of their own, with opposition support, and emerge as a force that is not dependent on Rajapakse hand-outs and subterfuges.

The UPFA will win Sabaragamuwa, it's a foregone conclusion. But if it does not it will be the end of the road for the Rajapakse regime; so that's wishful thinking as yet. However the North Central province could be a fight. Farmers are angry about prices and absence of relief during a drought and a resolution expressing no-confidence in the Provincial Agriculture Minister is due to be tabled in the PC at the end of June. Again, in holding PC elections in the North Central province the government is taking a calculated risk. That it is prepared to take such risks in the Eastern and North Central provinces is an indication that the regime is extremely pessimistic about the economic scenario for the next two or three years and/or it is very unsettled by international pressures.

The elephant in the room is the provincial council election that is not being held; the Northern Province, the country's only Tamil majority province. Although the 13th Amendment to the Constitution, the Indo-Lanka accord and the whole concept of provincial councils were advanced for the purpose of devolving a modicum of power to the Tamils, the irony is that this Tamil majority province is the only one in Sri Lanka that has never enjoyed devolution or elected a provincial council. The absurdity of Lanka's political landscape could not be more profound!

The TNA as well as Lanka's joint opposition consisting of the UNP, Mano Ganesan's party and two left parties (USP and NSSP) have demanded Northern Province PC elections immediately and prior to the three farcical PC elections proferred up by the regime for its own tactical purposes. The Rajapakses will not hold Northern PC elections because they know they will be routed and international criticism of the regime for war crimes and rights violations will be strengthened. Hence Sri Lanka stumbles from crisis to crisis.

■ Electoral abuses, intimidation and vote rigging

Foreign readers are unlikely to comprehend the scale and nature of electoral malpractice after Rajapakse assumed power. Of course people living in an Asian democracy take a certain amount of ballot stuffing, street violence and beating up of each other's election workers, in their stride; that's life. What I am impressing on the reader is that electoral abuse in Sri Lanka took a leap in the direction of hell on earth starting the latter part of President Mahinda Rajapakse's first term.

Political speculators suggest that the government knows economic conditions are spiralling down, so it thinks "better hold elections early before everything hits rock bottom.

Some examples of what goes on are: Use of state premises, government vehicles and government servants in electoral work, partiality on a scale never before seen in Sri Lanka of police and military, beatings of opposition workers with impunity, abuse of privileges by Ministers, display of posters in violation of Electoral laws by the government side only without the police raising a finger, and impunity of UPFA offenders from arrest or prosecution for all such acts. The Sri Lankan public has become so inured that it is no longer news at home, this paragraph is only for the information of overseas readers who may still cherish fond illusions about the state of wellbeing of democracy in this once blessed isle.

This is not an easy game plan to counter. No one who values demo cracy can refuse to accept an electoral challenge. And who has patience with those who say an election is good but it is going to be rigged? The Carter Centre and folks like that are too naïve to handle our kind of native cunning. It's only when people take their fate into their own hands that fake democracy is exposed.

Courtesy: South Asia Analysis Group

நியூ மோல்டன் தமிழ் பாடசாலை &
நியூ மோல்டன் நுண் கலையகம்

(Based at, The Holy Cross School, 25 Sandal Road, New Malden KT3 5AR)

தமிழ் மொழி/ நுண்கலை ஆசிரியர்கள் தேவை

நியூ மோல்டனில் வருகிற புரட்டாதி மாதம் ஆரம்பிக்க இருக்கிற தமிழ்ப் பாடசாலை-நுண் கலையகத்துக்கு தமிழ் மொழி மற்றும் நுண் கலைகள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள்.

இதில் ஆர்வமுள்ள தமிழ் ஆசிரியர்கள் உங்கள் விண்ணப்பங்களை (CV) கீழேயுள்ள முகவரி அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.
நியூ மோல்டன் நுண் கலையகத்துடன் இணைய விரும்பும் கலை ஆசிரியர்கள் தயவுசெய்து நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

New Malden Tamil School, 194 Merton High street, South Wimbledon, SW19 1AX

மின்னஞ்சல் : admin@NewmaldenTamilschool.org.uk

மேலதிக தகவலுக்கு : 020 3130 1769/ 077 5472 6905 / 074 0540 1392 (ரவி அண்ணா)

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலை யினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

American Foreign Policy and the HRC Resolution on Sri Lanka

By : Gibson Bateman

The Obama administration did fight to get a seat on the Human Rights Council (HRC) in 2009; something that George W. Bush probably did not even contemplate. And, as David Bosco has noted, the US has been relatively active at the HRC since that time. Bosco goes on to say that "The United States has laid special emphasis on the Council's use of special experts, individuals given a mandate to investigate some particular country or human rights theme." On the other hand, the Obama administration's approach towards experts wanting to examine US policy has been rather mixed, especially "when UN experts request information about sensitive areas of national security and counterterrorism policy."

Since the dawn of the Cold War, it has always been easy to question American intentions when it comes to human rights. That said, Obama's escalation of drone attacks in Afghanistan, Pakistan and elsewhere is disturbing. It reveals a very high tolerance for (inevitable) civilian casualties and an inability to see that the proliferation of such attacks is harmful to US interests over the long-term. A recent New York Times article about President Obama's manage ment of a 'Kill List' is not helping matters.

George W. Bush was a walking contradiction when it came to human rights, but, in many ways, President Obama's policies have been even worse than those of his predecessor, especially as it relates to counterterrorism. Obama loyalists need to stop pretending that the president cares about international human rights; the president's record on foreign policy does not support such a notion.

Strong, bipartisan US support in defeating the LTTE aligned almost perfectly with America's broader "Global War on Terror," a cause venerated by most of the American foreign policy establishment.

All of this makes me wonder what was driving US diplomatic efforts in Geneva last March. Not least because, on the same day the HRC resolution was passed, the US State Department announced a loosening of restrictions to sell surveillance equipment to the Sri Lankan government. In spite of what the US government says, it is hard to see the two developments as completely unrelated. Was the resolution mostly about human rights? Or was it mostly just about power? Was it a reminder that America's selective application of human rights continues under Barack Obama's watch?

Perhaps an equally important question is the following: What will happen at the Human Rights Council if Obama is not re-elected?

A Mitt Romney Presidency

Were he to defeat Obama, I do not think anybody is expecting an especially progressive or nuanced foreign policy from Mitt Romney, the Republican presidential candidate. Most of the people advising Romney on foreign policy are consummate Washingtonian insiders, reluctant to acknowledge American decline or contemplate what a more humble foreign policy can and should look like. Besides, there are times when Romney has shown a profound lack of understanding about America's strategic priorities on matters of foreign policy and national security. This spring he proclaimed that Russia was America's 'number one geopolitical foe.'

It is true that the US presidential election will be decided on domestic issues, not foreign affairs. Nevertheless, Romney's inability (or unwillingness) to articulate a coherent (and more modest) foreign policy is not what one would hope to see from a future commander-in-chief. He needs to go beyond empty rhetoric about "American greatness."

A Romney presidency would probably herald foreign policy continuity more than anything else, though Romney might place less emphasis on creating the veneer of multilateralism that Obama has usually been keen on.

The Twenty-Second Session of the Human Rights Council

I have no idea what the Rajapaksa administration is thinking, but they do not seem to be taking the resolution passed at the HRC's 19th session very seriously. One can already envision a speech by a senior government official in March 2013 saying something like the following: The government of Sri Lankan has carefully selected many, many good recommendations after thoughtful deliberation with a variety of actors, but that, unfortunately, there are just so many recommendations that have been selected….. and Sri Lanka is just coming out of its thirty year defeat of terrorism….so more time is needed. People need to just be patient while the government quietly implements some LLRC recommendations….please be patient and check back in a couple years.

What Next?

Were the Rajapaksa administration to dismiss the HRC resolution, it is difficult to predict what the backlash would be. At this point, it is hard to imagine that there would be much of an appetite for another, tougher resolution against Sri Lanka. And it is hard to imagine that the US would lead the way again; getting the watered-down resolution passed at the 19th session was difficult enough. It is even harder to imagine that the US would push for greater action at the HRC (on any issue) if Mitt Romney were to be elected president in November.

The door has been left open for continued scrutiny of Sri Lanka's human rights record; even though there is still a very real chance that empty rhetoric and hollow promises from the Rajapaksa administration will be enough to forestall more meaningful action at the HRC.

The HRC resolution on Sri Lanka was important, although there are still many reasons for people to be skeptical about what can be accomplished at the Council. The door has been left open for continued scrutiny of Sri Lanka's human rights record; even though there is still a very real chance that empty rhetoric and hollow promises from the Rajapaksa administration will be enough to forestall more meaningful action at the HRC. There is a significant group of (mostly powerful) countries that intermittently champion good intentions but face few consequences for their respective inconsistencies. Whether the current regime in Colombo can add Sri Lanka's name to that list remains to be seen.

Courtesy: groundviews.org

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!
உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதுகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridge
Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions

SRI KANTH & CO SOLICITORS

We practise in the following areas of law:
- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

KIDS பேப்பர்

Plants

A Tiny root pushes out of the seed and down into the soil. Then a Shoot grows up towards the light, leaves grow to make food and the rootss spread to find water.

A flower grow and is pollinated by insects. A new seed grows that will produce new plants the following year.

Vigaashan

Night...

- Doors Creeking
- Wolfs Howling
- Tress Tustiling
- Taps Dripping
- Humans Sleeping
- Wind Whistling
- Paper Flapping
- Dogs Barking

Ragaveena SureshKumar
Age8, Wimbledon

சிந்திக்க ....
சிரிக்க .....

'நண்பா,புலித் தோல் பார்த்திருக்கிறாயா?"
'பார்த்திருக்கிறேனே !'
"எங்கே?"
'புலியின் மீதுதான்."

அரசனின் மந்திரக் குவளை !

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் மிகவும் முன் கோபக்காரன். தன் கெட்ட குணம் தெரிந்தும் அவனால் அதை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

ஒரு நாள் தேவதை ஒன்று அவன் முன் தோன்றியது. பொன்னால் செய்த ஒரு குவலையை அவனிடம் கொடுத்தது. உனக்குச் சினம் வரும்போதெல்லாம் இதில் மூன்று முறை தண்ணீர் நிரப்பிக்குடி பிறகு சினமே வராது என்று கூறி மறைந்தது தேவதை.

அப்போதிருந்தே அரசன் அப்படிச் செய்யத் தொடங்கினான். சில நாட்களில் அவன் சினம் அவனை விட்டு விலகியது.

பல நாட்கள் சென்றன.
மீண்டும் ஒரு நாள் தேவதை அவன்முன் தோன்றியது.

மந்திரக் குவலை கொடுத்ததற்காக பலமுறை அதற்கு நன்றி கூறித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான் மன்னன்.

மன்னனே உன்னை ஏமாற்ற நான் விரும்பவில்லை. அது மந்திரக்குவலை அல்ல.

சாதாரணமானதுதான்.
சினம் வரும்போது சிந்திக்க நேரம் இருக்காது. சிந்தனை வந்தால் சினம் தானே குறையும்.

தண்ணீரை மூன்று முறை ஊற்றிக் குடிக்கும் போது நேரம் கிடைக்கிறது. அப்போது சிந்திக்க முடிவதால் புலன்கள் அமைதி பெறுகின்றன.

ஆத்திரம் நியாயத்திற்குத் தன் இடத்தைக் கொடுக்கிறது என்று கூறி மறைந்தது தேவதை.

-வருணன்

Tips of the Week

ஹலோ குட்டீஸ் இந்த வாரம் www.kids.niehs.nih.gov என்ற இணையத்தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பார்ப்பமேன். இத்தளத்தில் Online Game, Puzzles, Coloring, Kids Songs மற்றும் Jokes, Riddles & Brain Teaser என சிறுவர்களுக்கு பிடித்த பல பயனுள்ள தகவல்களை கொண்டமைந்துள்ளது இந்தத் தளம். வாங்க குட்டீஸ் பழகலாம்.

Web Address : www.kids.niehs.nih.gov/games

Colouring - 173



Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER . you could be the lucky winner Gift from KALAIKILI...

நீங்களும் கலைக் கிளி வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

Issue 172 Winner

T. Ashuvinie

Pakshika Manchuthan

Vigaashan Ashokan

Mazneen, 6 Yrs

S.Asokan, S-Harrow

Nilani, 6 Yrs

Ramya, 8 Yrs

T.Lakshvinee, 4 Yrs

Bharathwaj, Essex

Abisha

S. Ragaveena, 8 Yrs

T.Ashuvinie, Northolt

Sakash Vicnarajah

RJ CINEMA PRESENTS..!!

Harrow Safari Cinema - Station RD / Daily Shows/ Cine World / Daily Show

Luton / Enfield / Staples Corner / Crawley / Birmingham Borad Street / Cardiff / Sheffield / Aberdeen / Edinburgh / Glasgow RS / Stockport / Liverpool / 02 (Sky Screen) / Wandsworth Wood Green / Feltham / Ilford / Milton Keynes / Bristol

அஜித் குமார்

II

ஆரம்பம்

இயக்கம் சக்ரி டொலேட்டி

REQULAR SHOW ON CINEWORLD FROM 13 JULY

Premier shows on 12/07/2012 at

Harrow Safari (Harrow, Station Road, London - 020 8426 0303) Big screen - 9.00 PM

Boleyn cinema (East Ham, 5 Barking Road, London - 020 8471 4884) Big screen - 10.00 PM

For show times & tickets

For show time Logon to www.cineworld.co.uk or rjcinema.co.uk

Call : 07806 324 712

முள்ளிவாய்காலுக்கு பின்னரான மீள் குடியேற்ற காலப்பகுதியில் உலகெங்கும் பரந்து வாழும் புலம்பெயர் கிளிநொச்சி மாவட்ட மக்களின் சக்தியை ஒன்று திரட்டி கிளிநொச்சி மாவட்ட மக்களின் உடனடி தேவைகளை பூர்த்தி செய்யவும் மற்றும் அவர்களின் கல்வி, மருத்துவம், பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுக்கும் முகமாகவும் ஐக்கிய இராச்சியத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு கிராமத்தை சேர்ந்த (கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூனகரி, கண்டாவளை) புலம் பெயர் நலன் விரும்பிகளால் 28.05.2012 அன்று உருவாக்கப்பட்ட ஒரு தொண்டர் அமைப்பே இந்த கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பாகும்.

Education assistance for most vulnerable children – LKR 90,000/ annum.Medical assistance for most vulnerable patients – LKR 120,000/ annum.Financial Support to Anpin Sakotharikal illam for Refurbishment of Building and Tube well – RS 85,000 .Instant financial support to all hospitals in Kilinochchi District –Rs 100,000 (Sept -2011).Kilinochchi Flood Response & Distribution of emergency relief items for displaced people in Kilinochchi –Rs 200,000(December 2011 for 415 families in kilinochchi district).Computer lab at Kilinochchi Public Library with 5 computers & Internet facility – LKR 320,000/-(10,000 Rs /month for internet & maintenance).Refurbishment of Uruthrapuram Sports club & Community Centre Library-)Rs 150,000.50 Bicycles donation to war affected people in Kilinochchi & mullaitheevu districts –Rs 600,000.Educational Fund for 28 university students in Kilinochchi & mullaitheevu District- Rs 75,000 per Month(through Kilinochchi District Educational trust) Food assistance for Mahadeva Archrama (KURUKULAM) –Rs 43,000 per month

எமது அங்கத்தவர்கள் சிலர் அவர்களது அன்புக்குரியவர்களது பிறந்த நாளை/ வேறு சிறப்பு தினங்களை முன்னிட்டு மகாதேவா ஆசிரம 314 அன்புச்சிறுவர்களுக்கான ஒரு நாள் விசேட உணவை வழங்கி வருகிறார்கள் நீங்களும் விரும்பினால் எம்முடன் இன்றே தொடர்பு கொள்ளுங்கள். (kilipeople2011@gmail.com)

English Books collection & distribution to 10 schools in Kilinochchi District.10,000 Free Exercise Books donation to students in kilinochchi district – Rs-360,000 for 20 Rural schools .Free Rapid Revision Classes & seminars for whole A/l students of kilinochchi district –Rs-100,000.Modern computer centre with 20 computers with internet facilities – Rs 3 millions (funded by katpka vinayagar temple- walthamstrow).Help for 10 Disabled family in Kilinochci, mullaitheeveu, mannar and Jaffna district –Rs 1 million(Maximum Rs100,000 per family)

Financial summary of Musical programme 2011-Sponsors- £4,770.00,Advert-£2,700.00,Enterance Tickets sale- £ 7,695.00,Raffle Tickets - £946.00,Stall Rents- £325.00,Total Income= +£16,436.00,Expenses= -£6,185.00,Surplus Income= £10,251.00,Uncollected Sponsors= £1,650.00,Net Income= £8,601.00

This advert supported by –Job point Market–

வேலை வாய்ப்பு வசதி. பகுதிநேர, அல்லது முழுநேர வேலைகள் நீங்கள் விரும்பிய அல்லது உங்களுக்கு வசதியான நேரங்களில் அல்லது நாட்களில் எம்மிடம் கிடைக்கும். மாணவர்கள், இல்லத்தரசிகள் , இரண்டாம் வேலை தேடுபவர்கள் அல்லது வேறு ஏதும் காரணங்களுக்காக பகுதிநேர வேலை மாத்திரம் பார்க்க விரும்புபவர்கள், அனைவரும் எம்மை அணுகலாம். பின்வரும் இடங்களில் வசிப்பவர்களுக்கு அல்லது பிரயாணம் செய்யக்கூடியவர்களுக்கு Harrow, Southall, Alperton, Heathrow, Wembley, Croydon, Gatwick, Crowley, Eastham, Walthamstow, Lewisham tooting , Wallington, Sutton, Hounslow, Hayes, Milton Keynes, Coventry, Tonbridge & Tunbridge-wells, Sevenoaks, Ashford.Job Type: Hotel /school/office cleaning jobs , Factory works Canteen/restaurant work, Cashier, Petrol station work, Health Care assistant, Child care work, Adult care work, and Nursery work, Driving work. We will pay UK's current minimum wage per hour (£6.08p)/ above ,Please E-mail you're CV or Name, area & contact details to jobpointmarket@gmail.com

அதே போல இந்த வருடம் நாம் அதே இடத்தில் நெஞ்சம் மறப்பதில்லை 2012 **(ON 21ST JULY 2012 @ ZOROASTRIAN HALL, Harrow)** என்ற இசை மாலையை உங்கள் ஆதரவுடன் நடாத்த எண்ணியுள்ளோம். நிச்சயம் இந்த இசை மாலைக்கு வருகை தருவதன் மூலம் இறுதி யுத்தத்தின் போது தமது அவயவங்களை இழந்து தவிக்கும் மாற்று வலுவுள்ளோருக்கான சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதில் நீங்களும் பங்குதாரர்கள் ஆகுங்கள். முடிந்தால் மாதம் மூன்று பவுன்ஸ் மட்டும் **DD** தந்து உதவுகள் "உண்ணுமுன் ஒருகணம் உன் உறவை நினை"

Account Name – KILIPEOPLE,
Sort Code- 40-05-19,Account Number- 51784722
Bank- HSBC, Paddington Branch,
02- Craven Road, Paddington, London W2 3PY.

இந்திய யூனியனுடன் இணைந்தாலென்ன?

பாகம் 114

அலசுவரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

மூக்கறுந்தவனுக்குச் சாங்கமென்ன சரியென்ன என்பார்கள், ஏற நனைந்தவனுக்குக் கூதலென்ன குளிரென்ன என்பார்கள், தலைக்குமேலே வெள்ளம் போனால் சாணென்ன முழமென்ன என்பார்கள் ஈழத் தமிழனுக்கும் இன்று இதுதான் நிலை. ஆரம்பத்தில் இலங்கையை ஒரு கூட்டாட்சிக் குடியரசாக மாற்றி அதில் வடகிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழரசை அமைக்க வேண்டுமென்ற கோட்பாட்டுடன் போராடினோம். கிழிக்கப்பட்டுப்போன பண்டா செல்வா, டட்லி செல்வா ஒப்பந்தங்களால் பாடங்களைக் கற்றுக்கொண்டோம்.

அதன் தொடர்ச்சியாக தமிழீழத் தாயகத்தை ஆயுத முனையிற் கேட்டோம்.

இன்று ஒன்றுமில்லாமல், எதையும் கேட்டுப் போராடக்கூடிய சக்தியுமில்லாமல் அடுத்தவர் தயவை எதிர்பார்த்து நிற்கிறோம். நாம் என்ன தவறு செய்தோம்? இவற்றையெல்லாம் பார்க்கும் போது எங்கோ எதிலோ ஓர் வரலாற்றுத் தவறை நாம் தொடர்ச்சியாக விட்டு வந்திருக்கிறோமென்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

தந்தை செல்வாவின் காலத்திலிருந்து இன்றைய சம்பந்தர் காலம்வரை, பண்டிதர் ஜவகர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி மற்றும் இன்றைய மன்மோகன் சிங் வரையான வடநாட்டுத் தலைவர்கள் உட்பட, பெரியார் ஈவெரா, அறிஞர் அண்ணா, கலைஞர், ஜெயலலிதாபோன்ற தமிழகத் தலைவர்கள் வரை எல்லோரையும் நமது தமிழ்த் தலைவர்கள் சந்தித்து இலங்கைத் தமிழர் தொடர்பான பிரச்சனைகளையிட்டு முறையிட்டே வந்திருக்கிறார்கள். ஆனாலும் அறுபது வருடங்களுக்கும் மேலான இந்தப் பிரச்சனைக்கு ஒரு முற்றுப் புள்ளி இடப்படவில்லை.

பெருமரத்தைச் சுற்றிய பல்லியும் சாகாதென்பார்கள். இந்தியா என்னும் பெருமரத்தை நாம் சுற்றிச் சுற்றியே வந்தும் கூட இன்றைக்கு ஏறக்குறைய அழியும் நிலைக்கு வந்துவிட்டோம். இப்படியே போனால் ஆகக் கூடியது இன்னும் பத்து ஆண்டுக் காலத்திற்குள் இலங்கைத் தீவில், குறிப்பாக வடகிழக்கில் எமது இருப்பின் சுவடு கேள்விக்குறியாகிவிடும். சிங்களத்தின் தொடர்ச்சியான திட்டமிடப்பட்ட குடியேற்றம், ராணுவத்தின் அடக்குமுறை, அதனால் ஏற்படும் தமிழரின் இடப் பெயர்வு என்று அனைத்து வழிகளாலும் நமது பிரதேசம் தமிழரின் தாயகமென்னும் அந்தஸ்தை மிக வேகமாக இழந்து வருகின்றது.

நாம் விட்ட வரலாற்றுத் தவறுதான் என்ன?

இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்கள் இந்தியாவுடன் அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டுடனான புவியியல், அரசியல் ரீதியான தொடர்பை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து கொண்டிருந்தும், இலங்கைத் தமிழர்கள், தமிழ் நாட்டிலேயே தங்கள் கலை, கலாச்சார, சமய, இலக்கியப் பாரம்பரியங்கள் அனைத்திற்கும் தங்கியிருந்தும், நாம் அனைவருமே தென் இந்தியத் திராவிட பரம்பரையினராயிருந்தும், வெள்ளைக்காரன் ஏதோ இலங்கைத் தீவைத் தனித் தேசமாக்கிச் சுதந்திரம் தந்துவிட்டானென்ற மமதையில் தமிழகத்தையும் இந்தியாவையும் ஒரு பொருட்டாக மதிக்காமலேயே போய் விட்டோம். கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதானால் சுதந்திரம் கிடைக்கவிருந்த காலத்தில் நமது தமிழ்ப் பிரதேசங்கள் இந்தியாவின் குறிப்பாகத் தமிழகத்தின் பிரிக்க முடியாத பகுதியென்பதை முன்வைத்து இந்தியாவின் ஒரு மாநிலமாக எம்மைச் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை பிரித்தானிய அரசிடம் முன் வைக்காமல் விட்டுவிட்டோம். இன்று, இலங்கையென்னும் நாட்டிற்குள் சிங்களப் பேராண்மை வாதத்தின் இரும்புப் பிடிக்குள் அகப்பட்டு மீள முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறோம்.

சிங்களமும் இதனால் பெரிய லாபத்தை அடைந்துவிடவில்லை. இலங்கையின் முன்னேற்றம் இதனால் ஒரு அரை நூற்றாண்டு பின் தள்ளியும் போய் விட்டது. கையிலெடுத்து விட்ட பேரின வாதத்தை கை விட முடியாத நிலைக்குச் சிங்களம் போய்விட்டது. இந்த அனைத்துக் குழப்ப நிலைகளுக்கும் காரணம் நாம் ஆரம்பத்திலேயே இந்தியாவின் ஓர் அங்கமாக எம்மை வைத்துப் பார்க்காமல் விட்டதுதானோ! என்று எண்ணத் தோன்றுகிறது.

சுதந்திரத்திற்கு முன்னர் கொத்தடிமைகளாகக் கூலிகளாக இந்தியத் தமிழர்கள் இங்கு கொண்டுவரப்பட்டபோது அந்தத் தொழிலாளவர்க்கத்தை அசூயையுடன் நோக்கி நம்மிலும் குறைந்தவர்களாக இலங்கையின் வம்சாவழி மேற்தட்டு வர்க்கம் கருதியதால் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவுடன் தங்களது தொடர்புகளை அரசியல் ரீதியில் மேம்படுத்திக்கொள்ள ஆர்வமில்லாமற் போய்விட்டது அன்றே காந்தி ஜீயிடத்திலோ நேருவிடத்திலோ நாங்களும் இந்தியாவின் குழந்தைகளே எங்களைக் கைவிட்டு விடாதீர்கள் என்று நம்மில் யாராவது வேண்டுகோள் விடுத்திருந்தால் சரித்திரம் வேறு திசையில் போயிருந்திருக்கும். ஆனால் யாரும் அத்தகைய சிந்தனையுடன் செயற்படவில்லை. அப்போது எமக்கு அந்தத் துரதிருஷ்டம் இல்லாமற்போனது எமது துரதிஸ்டமே. சோல்பரி வந்து எம்மைப் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்துக்குள் விழுத்திவிட்ட பின்னரும் கூட நாம் விழிப்படையவில்லை. ஏனென்றால் வறிய இந்தியாவின் தமிழர்களோடு எம்மைச் சேர்த்துப் பார்க்க எம்மில் யாருக்கும் விருப்பமிருக்கவில்லை. அந்த அகந்தையின் விளைவை நாம் இன்று அறுவடைசெய்து கொண்டிருக்கிறோம். சரி, போனது போகட்டும். இனி நடந்தவைகளைப் பேசிப்பயனில்லை. மேற்கொண்டு செய்ய வேண்டியது என்ன என்பதையாவது சற்று நிதானத்துடன் ஆராய்ந்தாலென்ன? அதையிட்டுத்தான் இனி நாம் கவனம் செலுத்த வேண்டும்.

பாக்கு நீரிணையின் இருபுறத்திலுமுள்ள தமிழ்த் தேசியத்தினை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத ஒரே அலகாக உலகின்முன் வைத்து இந்தியாவுடன் ஐக்கியப்பட்டதோர் மாநிலமாகத் தமிழீழத்தை உருவாக்கும் முயற்சியில் இறங்கினாலென்? சில வேளைகளில் இத்தகைய அணுகுமுறைகள் நகைப்புக்கிடமானதாக எம்மவர்களின் மத்தியில் கருதப்படவும் கூடும். அதற்கான விசேடித்த காரணங்களெதுவும் இருக்கமுடியாது. தங்கள் தலைமைத் துவத்தை இழக்க நேரிடுமோ! என்ற ஐயத்தில் சில தமிழ் அரசியற் தலைமைகள் இதனை ஏற்க மறுத்தாலும் இப்போது தலைக்குமேலாக வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய நிலையில் நமது தாயகத்தைக் காப்பாற்றிக்கொள்ள இதைவிட வேறு சிறந்த வழி ஏற்படக்கூடுமாவெனத் தெரியவில்லை. ஒரு புறத்தில் இனப் பிரச்சனைத் தீர்வுக்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற அதே வேளை, தமிழீழத்தின்மீதான முழுமையான உரிமை பாராட்டலுக்குத் தமிழகத்தைத் தூண்டி விடுவதும், இந்திய மத்திய அரசின் நிர்வாகப் பரப்பினுக்குள் தமிழீழம் கொண்டுவரப்பட வேண்டுமென்று போராட்டங்களை முன்னெடுப்பதும் சிங்களப் பேரினவாதிகளின் வயிற்றில் புளியைக் கரைக்குமென்பதில் சந்தேகமேயில்லை.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் கையை ஈழத்தமிழர்கள் பலப்படுத்தவும், எமக்கான மொழிவாரி நிர்வாக அலகொன்றை இந்திய மத்திய அரசின்கீழ்ப் பெற்றுக்கொள்ளவும் நாம் தொடங்கும் போரட்டம் வழிகோலுமானால் அதையிட்டு இந்திய நடுவண் அரசு நிச்சயம் உள்ளூர மகிழ்ச்சியடையவே செய்யும். எந்தவொரு நாட்டிலும் நாங்கள் உங்களுடன் சேர்ந்து வாழப்போகிறோமென்ற கோரிக்கையுடன் நடத்தப்படும் போராட்டங்களுக்குச் சட்ட ரீதியான தடைகள் உருவாகப் போவதில்லை. மாறாக வடமாநிலங்களிலும் இத்தகைய கோரிக்கைகளுக்கான ஆதரவு வலுவடையவே செய்யும். தமிழகத்தில் கலைஞர் கருணாநிதி போன்றோரின் தற்போதைய தமிழீழத்திற்கான ஆதரவுக்குரலையும், ஏனைய தரப்பினரின் அனுதாபத்தினையும் தக்கமுறையில் வழிப்படுத்தி இந்திய யூனியனுடன் எமது தமிழீழத்தாயகத்தை இணைக்கும் முயற்சியில் இறங்கினாலன்றி இன்னும் பத்தாண்டுக்காலத்தினுள் உருவழிந்து போய்விடக்கூடிய தமிழீழ தேசத்தினை நாம் மீட்டெடுப்பது இயலாத காரியமாகவே போய்விடக்கூடும்.

தொடருவம்..

ELOHIM FOURSQUARE GOSPEL CHURCH
எலோகிம் நாற்சதுர சுவிஷேச சபை

மரியாதைக்குரிய மக்களே!!

உங்கள் உள்ளத்தின் ஆழத்திலே யாருக்கும் தெரியாமல் அழுது கொண்டு ஒரு கேள்விக்குறியோடு இப்பொழுது நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கலாம்...

யார் எனக்கு உதவி செய்ய முடியும்? யார் என் கண்ணீரை துடைக்க முடியும்? யார் என் நோயை சுகமாக்க முடியும்? யார் என் துக்கத்தை மாற்ற முடியும்? யார் என் மதுப்பழக்கத்தை, புகைப்பழக்கத்தை, போதைவஸ்து பழக்கத்தை விட்டுவிட உதவ முடியும்? யார் என் பிரிந்துபோன குடும்பத்தை மறுபடியும் இணைக்க முடியும்? யார் எனக்கு மந்திர சூனியத்திலிருந்து விடுதலை தரமுடியும்? யார் எனக்கு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை தர முடியும்? யார் என்னை பாவத்தில் இருந்து மீட்க முடியும்? யார் என் பாரங்களை சுமக்க முடியும்? யார்? யார்? யார்?

யார் என் கேள்விகளுக்கு பதில் தர முடியும் என்று நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆம் உங்கள் பாரங்களை சுமப்பதற்கும், உங்கள் கேள்விகளுக்கு பதில் தரவும், உங்களுக்கு உதவி செய்வதற்கும் இந்த உலகத்திலே ஒருவர் இருக்கிறார். அவர் தான் அன்பான ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து.

இயேசு உங்களை நேசிக்கிறார்.

இயேசு சொன்னார் : ''வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று அதுமட்டுமல்ல உங்களுக்காகவும், இந்த முழு உலகத்திற்காகவும் ''தேவன் தம்முடைய பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.'' யோவா 3:16
ஆகையால் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு பாவமன்னிப்பையும், விடுதலையையும், சந்தோசத்தையும், சமாதானத்தையும் தந்து ஆசீர்வதிப்பார்.

Our Meetings : Heston, Hounslow, Hanwell, Chessington, Epsom.

Address : Fenton House Community Hall, Heston Farm Estate, Biscoe Close, Heston, Middlesex, TW5 OUU

Contact : Kamal & Sarah
Phone : 020 8224 2609, 07826 558624, 07990598541
E-mail : elohimfgchurch@yahoo.co.uk

PERMA INTERNATIONAL
Pioneering Sri Lankan Shipping Agent
(PERCY JAYAWARDENA)

Cars, Vans Trucks Full Containers - Part Loads Plants & Equipments

Don't be misled by others who use our name
Established SINCE 1966 and Serving The Community for 46 years

உலகமெங்கும்
தரை, கடல்,
வான் மார்க்கமாக
பொருட்கள்
அனுப்ப
நம்பிக்கையான
ஒரே இடம்!

We have Shipped 165 Motor Vehicles to Colombo in one Vessel

Shipping to Sri Lanka & Worldwide Destinations by SEA - AIR - ROAD

Hotline : 079 7786 4956, 0208 452 6750
Email : karpersoverseas@yahoo.com

We Started ■ Others Followed

வல்வை நலன்புரிச் சங்கத்தின் கோடை விழா

6ம் ஆண்டு நிறைவு விழா

குறோளி தமிழ் கல்விக் கூடத்தின் 6ஆம் ஆண்டு நிறைவு விழா 30-06-12 அன்று HAZELWICK SCHOOL இல் நடை பெற்றது. நிகழ்வில். முள்ளி வாய்கால் பேரவலத்தின் 3ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வும் தமிழ் புத்தகக் கண் காட்சியும் நடைபெற்றது. இவ் நிகழ்வில் Mr.henry smith, mp-crawley, ms.catherin falvey, community engagement, officer, crawley boroush council Mrs.sarah brewster, community,engagement offiicer crawley police ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதி வணகக்கத்துக்குரிய றொயின் மக்கிளாசன் அவர்கள்

அன்னை தமிழாள் அரவணைத்துத் தத்தெடுத்த
உன்னதனாய் எங்கள் உடன் பிறவாச் சோதரனாய்
ஆங்கிலத்தால் அன்னை அழகை உலகினிடம்
ஓங்குவித்த செம்மல் உயிர் விட்டான் - ஏங்குகிறாள்
தன்றன் பெறாமகனைத் தவறவிட்ட தமிழன்னை
பெரிய புராணத்தை பெயர்த்தினிய ஆங்கிலத்தில்
உரிய முறையில் உலகிற்குத் தந்த மகன்
அரிய தமிழின்மேல் அன்பால் மகிழாசான்
உரொபின் மக்ளாசனென்னும் உயர்ந்த கலை ஞானி
விரைவில் மறைந்ததற்காய் விம்முகிறாள் தமிழன்னை
காலின் சிலம்பினதி காரத்தைக் கண்டுருகி
மேலும் அது துலங்கி மேதினியோர் காணவென
ஆங்கிலத்திற் செய்த அறிஞனவன் தன் மகன் ஏன்
ஏங்கவிட்டுச் சென்றான் எனப்பொறுக்க மாட்டாமல்
அன்னை தமிழாள் அழுதரற்றிச் சோர்கின்றாள்
சிற்றிடையில் மின்னும் செல்வ மணிமேகலையை
உற்றுப் பார்த்ததின் ஒளிகூட்ட முன்வந்து
தாய்க்காக ஆங்கிலத்தில் தமிழழகைக் காட்டிய தன்
சேய்க்கேன் மரணமெனத் தேம்பி மனங்குமுறி
உள்ளங் குலைந்துநெட் டுயிர்க்கின்றாள் தீந்தமிழாள்
கிறித்துவத்துப் போதகராய் கீழைத் திசை செல்ல
மறித்து வைத்து என்றன் மகனாய் இருவென்று
தாய்த்தமிழாள் வேண்டத் தட்டாது தென்னாட்டில்
ஆய்ந்தறிந்த தன்றன் அறிவுச் சுரங்கத்தை
உலகுக்குணர்த்த உரைகள் பல செய்த
பேராசான் இன்று பிரிந்திட்டான் ஆனாலும்
பார்மீது எங்களது பைந்தமிழின் பேரழகை
யாரும் அறிய, நாங்கள் பெருமையுற - ஆர்வத்தினோடு
அருஞ் சேவை செய்திட்ட - மக்ளாசன் ஐயா
உம் வாழ்வெம் இதயத்தில்
ஆழப்பதிந்து அறிவூட்டும் - எப்போதும்
நித்தியமாம் ஜீவ நிறைவில் உமதான்மா
கர்த்தரோடொன்றிக் களிக்கும்.

ரொபின் மக்கிளாசன் ஐயா அவர்களைப் பிரிந்து வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் –எஸ். கருணானந்தராஜா

6ம் ஆண்டு நிறைவு விழா

இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் ஏற்பாடு செய்த இளைய அப்துல்லாவின் "லண்டன் மாநகரம் உங்களை வரவேற்பதில்லை" நூல் வெளியிட்டுவிழாவில் 1.7.2012 அன்று இடம்பெற்றது நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே நீங்கள் காண்கிறீர்கள்.

புத்தகக் கண்காட்சி

சென்னை மணிமேகலையின் பிரசுரத்தின் புத்தகக் கண்காட்சியூலை 13ஆம் திகதிவெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு வெம்பிளியிலுள்ள ஈழபதிஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. 450 ஈழத்து எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்கள், கல்கண்டு தமிழ்வாணன் எழுதிய புத்தகங்கள் என பல் துறை சார்ந்த புத்தக விற்பனைக் கண்காட்சியும் நடைபெறும்.

அடுத்த நாள் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு Ilford செல்வவிநாயகர் ஆலயத்தில் இக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

நடக்க இருக்கும் நிகழ்வுகள்

JULY 07 SATURDAY

Prize Day and Cultural Programme

Hendon தமிழ் பாடசாலையின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்படும் பரிசளிப்பு விழா நிகழ்வுகளும் கலாசார நிகழ்வுகளும்.

நேரம்: மாலை 04:00 மணி முதல்

இடம்: Canon High School, Shaldon Road
Harrow, HA8 6AN

JULY 14 SATURDAY

மெய்வல்லுனர் போட்டிகள்

மில்ரன் கீன்ஸ் தமிழ்க் கல்விக் கழகத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டிகள்

நேரம்: காலை 09:30 மணி முதல்

இடம்: Downs Barn Pavilion, Downs Barn
Milton Keynes, MK14 7QP

தொடர்புகளுக்கு: 07507855228, 07791495933
07791495933, 07846022463

JULY 15 SUNDAY

விளையாட்டுப் போட்டிகள்

பிரித்தானிய தமிழர் விளையாட்டுக் கழகம் (BTSC) நடாத்தும் இல்லங்களுக்கிடையிலான நான்காவது வருட மெய்வல்லுனர் போட்டிகள்.

நேரம்: காலை 09:00 மணி முதல்

இடம்: Lea Vally Athletics Center
61 Meridian Way, London N9 0AR

JULY 21 SATURDAY

நெஞ்சம் மறப்பதில்லை

இறுதி யுத்தத்தின் போது தமது அவயவங்களை இழந்து தவிக்கும் மாற்று திறனாளிகளின் வளர்ச்சிக்காக கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பால் நடாத்தப்படும் இன்னிசை இரவு

நேரம்: மாலை 5.30 மணி முதல்

இடம்: Zoroastrian Hall, 442, Alexandra Avenue,
Harrow, Middlesex, HA2 9TL.

இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

5 Chapel Road, West Ealing, London WI.39AE தொலைபேசி இல: 0208 810 0835 தொலைநகல்: 0208 840 0485 / Email: info@ammanealing.com Web: www.ammanealing.com

மகோற்சவ விஞ்ஞாபனம் 2012

இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கோவில் கொண்டு அகிலமெல்லாம் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான நந்தன வருடம் ஆடி மாதம் 05ம் நாள் வெள்ளிக்கிழமை 20-07-2012 கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 12-08-2012 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 13-08-2012 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 15-08-2012 வைரவர் மடையுடன் நிறைவுற திருவருள் கூடியுள்ளது. அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்குகொண்டு தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

மகோற்சவ நிகழ்வுகள்

20/07/2012	வெள்ளி	கொடியேற்றக் காட்சி காலை 10.00மணி
21/07/2012	சனி	ராஜ ராஜேஸ்வரி அருட்காட்சி
22/07/2012	ஞாயிறு	கனகதாரா லட்சுமி அருட்காட்சி
23/07/2012	திங்கள்	நாகபூசணி அருட்காட்சி
24/07/2012	செவ்வாய்	மீனாட்சி அம்பாள் அருட்காட்சி
25/07/2012	புதன்	சரஸ்வதி வித்யா அருட்காட்சி
26/07/2012	வியாழன்	அர்த்த நாரீஸ்வர அருட்காட்சி
27/07/2012	வெள்ளி	கைலாச தரிசன அருட்காட்சி
28/07/2012	சனி	அன்ன பூர்ணாம்பிகை அருட்காட்சி
29/07/2012	ஞாயிறு	அபிராமி தரிசன அருட்காட்சி
30/07/2012	திங்கள்	சௌபாக்கியாம்பிகை அருட்காட்சி
31/07/2012	செவ்வாய்	காமாட்சி அருட்காட்சி
01/08/2012	புதன்	அனந்த சயன அருட்காட்சி
02/08/2012	வியாழன்	புஸ்பக விமான அருட்காட்சி
03/08/2012	வெள்ளி	கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி
04/08/2012	சனி	வசந்தோற்சவ அருட்காட்சி
05/08/2012	ஞாயிறு	பக்தானுக்கிரக அருட்காட்சி
06/08/2012	திங்கள்	சந்தானபாக்கிய லட்சுமி அருட்காட்சி தங்கரதப் பவனி
07/08/2012	செவ்வாய்	ஜோதி மங்கள அருட்காட்சி
08/08/2012	புதன்	ஓம்காரரூப தர்சன அருட்காட்சி
09/08/2012	வியாழன்	மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி
10/08/2012	வெள்ளி	வேட்டைத் திருவிழா அருட்காட்சி
11/08/2012	சனி	சகோபுர தர்சன அருட்காட்சி (சப்பரம்)
12/08/2012	ஞாயிறு	இரதோற்சவ அருட்காட்சி (தேர்) காலை 10.00மணி
13/08/2012	திங்கள்	தீர்த்தவாரி அருட்காட்சி
14/08/2012	செவ்வாய்	பூங்காவன அருட்காட்சி
15/08/2012	புதன்	வைரவர் மடை

20-07-2012 முதல் 11-08-2012 வரை பூசை நேரம்

காலை 8:15	சங்கல்பம்
காலை 8:30	அபிசேகம்
காலை 10:40	ஸ்தம்ப பூசை
காலை 11:30	வசந்தமண்டப பூசை
பகல் 1:00	மகா பிரசாதம்
மாலை 5:15	சாயரட்சைப் பூசை
மாலை 5:45	ஸ்தம்ப பூசை
மாலை 6:30	கலாசார நிகழ்வு
இரவு 7:15	வசந்தமண்டபப் பூசை
இரவு 10:30	விழா நிறைவு

தேர்த்திருவிழா அன்று அர்ச்சனைத் தட்டுக்கள் மூலம் கிடைக்கும் நிதி யாவும் தாயகத்தில் வாழ்வாதார உதவி வேண்டி நிற்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

அம்பிகை அடியார்களே, தங்களின் பேருதவியினால் தாயகத்தில் 14 இல்லங்களில் 500 வரையான பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றார்கள். கடந்த ஆண்டில் "காக்கும் கரங்கள்" திட்டத்திற்காக £81,990.00 பவுண்களும் ஏனைய பணிகளுக்காக £114,285.00 அனுப்பப்பட்டுள்ளது. ஆலய தொடக்க காலத்தில் இருந்து தாயகப் பணிக்கு £1,620,9711.55 அனுப்பப்பட்டுள்ளன. ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்! அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்! அவர்களுக்குப் படிப்பறிவித்து இருளகற்றுவோம். அவர்களுக்கு கலங்களை விளக்காக அமைவோம்! அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்!

கரும்புலி, அடிமுடி அறிய முடியாத அற்புதம்

கரும்புலி
சாவுக்குத் தேதி குறிக்கும் சரித்திரம்.
கந்தகத்தை மேனியிற் கட்டிய சந்தனம்.
வீதியுலாவுக்காக வெளியில் வராத
விக்கிரகம்.
உயிர்மூச்சை ஊதிவிடும் உன்னதம்.
அடிமுடியை அறியமுடியாத அற்புதம்
தென்றலும் புயலும் சேர்ந்ததான கலவை.
இவர்களை எழுதத் தொடங்கினால்...
எந்தமொழியும் தோற்றுப்போகும்.
வார்த்தைகள் வறுமை அடையும்
உளவியலாளர்கள் உள்ளே புகுந்தாலும்
வெறும்கையோடுதான் வெளியே
வருவார்கள்.
கற்பனைக்கவிஞர்கள் கவிதை எழுதினால்
அற்புதம் என்பார்கள்
அடுத்தவார்த்தை வராது.
சித்திரக்காரர்களும்
தீப்பிழம்பைத்தானே தீட்டமுடியும்.
பக்கத்திலிருந்து பழகியவர்கள் கூட
குறிப்புக்கள் மட்டும் தான் கூறமுடியும்.
ஆழத்தோண்டினாலும் மூலவேர் தெரியாது.
சமுத்திர நீரை
அகப்பையால் அள்ளி அளக்கமுடியுமா?
ஓடும் முகிலை
ஏணிவைத்து எட்டித்தொட முடியுமா?
எதிரியின் எந்தவலுவும்
இறுதியில் இவர்களிடம் சரணடையும்.
கடைசி நொடிவரை சிரித்தபடி திரிவர்.
மறுநாள்
வெடித்த செய்தி வெளிவரும்போது
ஜாதகமும் சோதிடமும்
தங்களுக்குத் தாங்களே தீமூட்டிக் கொள்ளும்
காலால் நடந்து
வாயால் மொழிந்து
கையால் தலைவாரிக் கொண்டு
எல்லோரையும் போலவேதான் இவர்களும்.
உள்ளே எரியும் விடுதலைக் கனல்மட்டும்
வேறுபட்டது.
உயிர்ப் பூவை கிள்ளி எடுத்து
விடுதலைக்கு விலை கொடுக்கும்
வித்தியாசமானவர்கள்.
கிட்ட நெருங்க முடியாத
இலக்குகளைக்கூட
தொட்டு அசைத்துவிடும்
துணிச்சலர் இவர்.
முதுகில் வேர்க்குரு போட்டாலே..
முந்நூறு மருந்துகள்
தேடும் உலகில்
சாவைத் தம் தோள்களில் சுமந்து
நொடிகளை கணக்கிட்டு நகரும் நூதனங்கள்
காற்றிலும் நீரிலும் இவர்கள் கலக்கும்போது
காற்றுக்கு வேர்க்கும்.
நீர் நெருப்பாகிவிடும்.
இவர்களுக்கு
சூரியன் கைகளுக்கு எட்டும் தூரம்தான்.
பசுபிக் சமுத்திரம் முழங்கால் ஆழம்.
கரும்புலிகள்;
தலைவன் தலைவாரிவிடும் புயல்கள்.
தாயை நேசிக்கும் அளவுக்கு
தலைவனையும் நேசிப்பவர்கள்.
தாயகத்தை மட்டும் பூசிப்பவர்கள்.
ஆவிபிரியும் அடுத்த கணம்பற்றிய அச்சம்
இவர்களின் அகராதியில்
அச்சிடப்படுவதில்லை.
யுலை 5.1987
கருமைக்கும் பெருமை வந்த நாள்.
புலியொன்று முதல் கரும்புலியான தினம்
நெல்லியடியில்
"மில்லர்" புதிய வரலாற்றை
தொடக்கிய நாள்.
"எல்லாம் சரி
வடமாராட்சி எமது கட்டுப்பாட்டில்"
கொழும்புக்குச் செய்தி அனுப்பியவனின்
வாய் மூட முன்னர்
செவிப்பறைகள் கிழிந்தன.
சாவு நேரே ஓடிவந்து
முகத்தில் சந்திக்குமென்று
எதிரி எப்படி எதிர்பார்த்திருப்பான்.
"உயிராயுதம்" வலுவானது.
கரும்புலிகள் – தேவை அறிந்து
செல்பவர்களே அன்றி
சாவை விரும்பிச் சந்திப்பவர்களல்ல..
இவர்கள் வசந்தம் தழுவாத கொடிகளோ
முகில்கள் முத்தமிடாத
மலைமுகடுகளோ அல்ல.
இதயம் இரும்பாலானவர்களும் அல்ல.
பனியாய் உருகும் நெஞ்சுக்கும்
பாகாய் இனிக்கும் வார்த்தைகளுக்கும்
உரிமையாளர்கள்.
வெடித்த பின்னரும்
இவர்கள் எல்லோரும் வெளிச்சத்துக்கு
வருவதில்லை.
சுவரொட்டியில் சிரிப்பவர்கள் சிலர்தான்.
"நடுகல் நாயகர்கள் " ஆகும் வாய்ப்பும்
எல்லோருக்கும் ஏற்படப் போவதும் இல்லை.
கல்லறை கூட இல்லாத காவியமாய்
வாய்விட்டு சொல்லியழும் வாய்ப்பும்
இல்லாமல் சிலருக்கு வெளியே தெரியாத
வேரின் வாழ்வு.
பலருக்கு மரணம் வாழ்வின் முடிவு
கரும்புலிகளின் ஜனனம் மட்டும்
மரணத்தில்தான் ஆரம்பம்
கால நதியில்
இவர்கள் ஓடிக் கரைய மாட்டார்கள்.
மற்றவர்களுக்கு
இனி என்ன செய்வதுதென்று
தலைவெடிக்கும் போதுதான்
இந்த சுகந்த ஊதுபத்திகள்
உடல்வெடித்துப் போகிறார்கள்.
"ஊரறியாமலே உண்மைகள் கலங்கும்
ஒருபெரும் சரித்திரம் ஊமையாய் உறங்கும்
வேருக்கு மட்டுமே விழுதினைப் புரியும்
வெடிமருந்தேற்றிய வேங்கையைத் தெரியும்"
பூகம்பத்தை போத்தலில் அடைத்தது போல
வந்தவரிகளில் வென்றவரிகள் இவை.
கரும்புலிகளுக்கு காணிக்கை என்ன?
கண்ணீரா? கல்லறையா?
இல்லை.
எதுவுமே இல்லை
நெஞ்சின் நினைவே
நெடிய கோபுரம்.
கரும்புலி அடிமுடி
அறிய முடியாத அற்புதம்!

- புதுவை இரத்தினதுரை



இறுக்கப்படும் பிரித்தானிய குடிவரவுக் கொள்கை

ஐ.நா. மனித உரிமைச் சட்டங்களைப் பயன் படுத்தி வெளிநாடுகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களும் விசாரணைகளின் பின் னர் இவர்களை நாடுகடத்தும் செலவினங் களை தடுப்பதற்கும், பிரித்தானியாவில் குடியே றுபவர்கள் தமது சொந்த வருமானத்தில் வாழ உறுதிப்படுத்தவும், குடிவரவுக் கொள்கையில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவர குடிவரவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக அறியப்படு கிறது. 2012ஆம் ஆண்டு யூலை மாதம் 9ஆம் திகதி அமுலுக்குவர இருக்கும் முக்கிய மாற்றங் களை பிரித்தானிய உயர்ஸ்தானிகக் காரியாலம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த வாழ்க் கைத் துணை ஒருவர் பிரித்தானியாவில் குடியே றுவதற்கு அனுசரணை வழங்க குறைந்த பட்சம் 18600 பவுண்ட்கள் வருமானமாக அனுமதி கோருபவர் அத்தாட்சிப்படுத்த வேண்டும் விண் ணப்பதாரரை தங்கி இருக்கும் பிள்ளை களை அனுமதிக்க கோரினால் முதலாவது பிள்ளைக்கு மேலதிக வருமானமாக 2200 பவுண்ட்சும் அதற்கடுத்த பிள்ளைகள் ஒவ் வொன்றுக்கும் 2400 பவுண்ட்கள் கூடுதல் வரு மானம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வாழ்க்கைத் துணையை அனுமதிக்க கோரும்போது தற் போது நடைமுறையிலிருக்கும் 2 வருட தகுதி காண் நிலையிலிருந்து 4 வருடங்களாக அதி கரிக்கப்படுவதாகவும் மாற்றம் கொண்டுவரப் படவுள்ளது.

பிரித்தானியாவில் குடியேறுவதற்காக போலித் திருமணங்களை தடுப்பதற்காகவும் குடும்ப உறவின் உண்மைத் தன்மையை நிரூபிப்ப தற்கு போதிய சவகாசம் தேவைப்படுவதால் இம்மாற்றங்கள் அவசியமென குடிவரவுத் துறை தீர்மானித்துள்ளது.

பிரித்தானியப் பிரஜையொருவர் வெளிநாட்டு மணமகளையோ அல்லது மணமகனையோ திருமணம் செய்த வகையில் பிரித்தானியாவில் குடியேறுவதற்கு வாய்ப்பளித்த தற்போதைய நடைமுறையில் மாற்றம் கொண்டு வருவதற்கு குடிவரவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதன்பிரகாரம் தம்பதியொன்று ஐந்துவருட நன் னடத்தைக் காலத்தை பூர்த்தி செய்வதற்கு குறைந்தபட்சம் 4 வருடங்கள் வெளிநாட்டில் ஒன் றாக வசிக்குமாறு கோரப்படும்.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேராத முதியவர் கள் பிரித்தானியாவில் வசிக்கும் உறவினர்க ளில் தங்கி வாழ்வதற்காக, குடியேற அனுமதி கோரும் பட்சத்தில் விண்ணப்பம் செய்பவர் இம் முதியவர்களை பராமரிப்பதற்கும், இவர்க ளுக்கு தேவைப்படும் சுகவீனம் சம்பந்தமான செலவுகளுக்கும் தாங்களே பொறுப்பாளிகள் என்றும் பொதுசன வரிப்பணத்திலிருந்து எது வித உதவியும் கோரப்பட மாட்டாதென்றும் உத் தரவாதமளிக்க வேண்டுமென மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

நடைமுறைக்கு கொண்டு வர இருக்கும் குடி வரவுக் கொள்ளை புலம்பெயர் தமிழ் மக்களின் வாழ்க்கையிலும் பாதிப்புகளை உண்டாக்கு மென்ற காரணத்தினால் இத்தகவல்களை தெரி விக்க கடமைப்பட்டுள்ளோம்.

சர்வதேச மொழிபெயர்ப்பு

இன்னும் சில நாட்களில் ஆரம்பமாகவிருக் கும் ஒலிம்பிக் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவும் பார்வையாளர் களாகக் கலந்து கொள்ளவும் கோடிக் கணக்கா னவர்கள் பிரித்தானியாவுக்கு வருகை தர இருப் பது எதிர்பார்க்கப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். வெவ்வேறு நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு வசதியாக அவரவர் பேசும் மொழிகளில் தொடர் பாடல் செய்தவதற்கு உகந்த முறையில் மொழி பெயர்ப்பு செய்ய ஐ.போன் தயாரிக்கும் நிறு வனங்கள் பயன்பாடுகளை (அப்ஸ்) புகுத்த தொடங்கிவிட்டன.

சர்வதேச மொழிகளில் உரையாடல்களை மொழிபெயர்க்கும் பிரபல நிறுவனமாக U Star 23 நாடுகளில் தெரிவுசெய்யப்பட்ட ஆராய்ச்சி யாளர்களின் உதவியோடு 13 சர்வதேச மொழி களில் தொடர்பாடல் செய்ய ஐபோன்களை பயன்படுத்தமுடியுமென ஊர்ஜிதம் செய்துள்ள னர். மேலதிகமாக 10 மொழிகளில் குறுந்தகவல் களையும் தெரிவிக்க முடியுமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

நேருக்கு நேராக சந்திக்கும் இருவர், மொழி தெரியாமல் திண்டாடுவதைத் தவிர்க்க ஐ போனில் எதிரெதிராக இருந்தவாறே பேசிப் புரிந்துகொள்ள இந்த நவீன உபகரணம் சாதார ணமாக உபயோகிக்கப்பட்டாலும், சர்வதேச அரங்கில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட் டிகளின் விவரணங்களை அறிந்து கொள்ள அதிக பலனைத் தரப்போவது நிச்சயமென U Star அறிமுகப்படுத்தியுள்ள TR4 U.M எனப் படும் பயன்பாடுகள் (அப்ஸ்) 80 தொடக்கம் 90 விகிதம் திருப்தியாக மொழி மாற்றத்தைச் செயற்படுத்தியுள்ளதாக தகவல்கள் கூறு கின்றன.

இலவசமாக கிடைக்கவுள்ள இந்த உபகர ணத்தை அப்ஸ் ஸ்ரோரிலும் U Star நிறுவனத் திடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாமென நம் பப்படுகிறது. சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளை கண்டுகளிக்கவும் பங்குபற்றவும், அந்தந்த நாடுகளுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளவும் இப்புதிய உபகரணம் ஒரு தொடர் புப் பாலமாக அமையப்போவது நிச்சயம்.

ஐ.போன் வைத்திருப்பவர்கள் இனி இதன் பயனை தவறாமல் அனுபவிப்பார்கள் என நிச்சயமாக நம்பலாம்.

ஊசிக்குப் பதிலாக அல்ராசவுண்ட் மாத்திரை

நீரிழிவு மற்றும் புற்றுநோய்களால் அவதிப் படும் நோயாளர்களுக்கு தேவைப்படும் மருந் துகளை ஊசி மூலம் தினமும் செலுத்தப்படு வதால் உண்டாகும் வேதனையை அன்றாடம் அனுபவிப்பவர்கள் ஏராளம். இவர்கள் அனுப விக்கும் வேதனையைக் குறைக்க மாற்று வழி களால் மருந்துகளை உடலில் செலுத்த முடியு மாவென ஆராய்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர் கள் புதிய பொறிமுறையை அறிமுகப்படுத்தி யுள்ளனர்.

இன்சுலீன் போன்ற மருந்தை தசைகளில் வேகமாக ஊடுவச் செய்து உடலுக்குத் தேவைப் படும் உந்துசக்தியை தரக்கூடிய வல்லமை. வாயினால் உட்கொள்ளும் மாத்திரைகளில் கிடைப்பது அரிதாகக் காணப்படுவதால், தசைக்குள் பரவக்கூடிய திறனை அல்ரா சவுண்ட் சிகிச்சை மூலம் கிடைக்கக்கூடிய இப்புதிய பொறிமுறையை பயன்படுத்த முடியு மென ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன.

அல்ராசவுண்ட் சிகிச்சை மூலம் தசைக்குள் ஊடுருவக் கூடிய மருந்துகளைச் செலுத்துவ தில் நிறைய அனுபவங்கள் நீண்ட காலமாகக் கிடைக்கப் பெற்றாலும் இன்சுலீன் போன்ற ஊட் டச்சத்தைத் தரும் மருந்துகளை உடலில் செலுத்துவது மிகவும் சிரமமாக இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். எனி னும் Massachusetts பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த டானியல் அன்டேர்சன் என்பவரும் அவரது குழவினரும் யூ.பில் என அழைக்கப் படும் zetrox நிறுவனத்திற்காக தயாரித்துள்ளனர்.

வாழ் வழியாக விழுங்கப்படும் இந்த மாத்தி ரையில் மெல்லிதாக தடவப்படும் ஊட்டச்சத்து நிறைந்த மருந்துகள் இரைப்பையை அடைந்த வுடன் அல்ராசவுண்ட் பொறிமுறை மூலம் உட லில் செலுத்திவிட முடியுமென ஆராய்ச்சியாளர் கள் நிரூபித்துள்ளனர். இரண்டு வருடங்களில் விற்பனைக்கு வரப்போகும் இந்த மாத்தி ரைக்கு ஆரம்பத்தில் அதிக விலை கொடுக்கத் தான் வேண்டி வரும். ஊசிகளால் குத்தப்படும் வேதனையைத் தவிர்க்க வேண்டுமானால் அதிக விலை கொடுத்துத் தான் ஆக வேண்டும்.

உ
நாகம்மை துணை

திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

Thiruvarulmigu Enfield Nagapooshani Ambaal Temple

61-65 Church Lane, Edmonton, London N9 9PZ ● Tel: 020 8884 3333, 020 8884 4333 ● Website: www.ambaal.org.

"நாகம்மை திருநாமம் நூறு நூறாயிரம் நண்ணினால் யோகங்கள் சேருமே சுக நலன்கள் பெருகுமே"

8ம் வருட மகோற்சவ விஞ்ஞாபனம் 2012

08.07.2012 ஞாயிற்றுக்கிழமை முதல் 25.07.2012 புதன்கிழமை வரை

அம்பிகை அடியார்களே,

சகல வளங்களும் நிறைந்து விளங்கும் இவ் இலண்டன் மாநகரின் வடபால் என்பீல்ட் பதியில் தன்னை நாடி வரும் அடியார்களின் இடர் களைந்து அருளை வாரி வழங்கி சந்தான பாக்கியத்தையும், அவரவர் வேண்டும் வரங்களை வாரி வழங்கும் அன்னை பராசக்தி என்பீல்ட் நாகபூசணி அம்பாள் திருவருளால் 8ம் வருட மகோற்சவப் பெருவிழா (நந்தன வருடம்) 08.07.2012 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 25.07.2012 புதன் கிழமை வரை 18 தினங்கள் நடைபெற உள்ளதால் அடியார்கள் விழாக்காலங்களில் விரதமிருந்து ஆசார சீலர்களாக வருகை தந்து அம்பாளின் திருவருளை பெறுக.

08.07.2012	ஞாயிறு	விநாயகர் திருவிழா
09.07.2012	திங்கள்	கொடியேற்றத் திருவிழா
15.07.2012	ஞாயிறு	பக்திமுத்தி பாவனோற்சவத் திருவிழா
18.07.2012	புதன்	வசந்தோற்சவம், மஞ்சத் திருவிழா
19.07.2012	வியாழன்	வேட்டைத் திருவிழா
20.07.2012	வெள்ளி	கைலாசவாகனம், கற்பூரச்சட்டி, மாம்பழத் திருவிழா மாலை 7.00 மணி முதல் 8.00 வரை பொன் சுந்தரலிங்கம் இசைக் கச்சேரி நடைபெறும்

21.07.2012	சனி	சப்பறத் திருவிழா
22.07.2012	ஞாயிறு	தேர்த்திருவிழா (பூரகர்மா) ஆடிப்பூரம் மதியம் 12.00 மணி தொடக்கம் 2.30 மணிவரை மணிபல்லவம் சாரங்கன் அவர்களின் இசை நிகழ்ச்சி இடம்பெறும்.
23.07.2012	திங்கள்	பஞ்சமூர்த்தி பவனியாக தீர்த்தத்திருவிழா
24.07.2012	செவ்வாய்	1009 சங்கர்பிசேகம், பூங்காவனம்
25.07.2012	புதன்	பிராயச்சித்தம், வைரவர் மடை

தேர்த்திருவிழா 22.07.2012

ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெறும் (பொது உபயம்)

தமிழர் தாயகத்தில் நடைபெறும் மோசமான நில ஆக்கிரமிப்பு!!

கடந்த மாத இறுதியில் சிறீலங்காவுக்கு இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் வருகை தந்திருந்தார். அவரது வருகைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் சொல்லப்பட்டன.

ஒன்று கடந்த ஏப்ரிலில் சிறீலங்காவுக்கு பயணம் செய்த சுஷ்மா சுவராஜ் தலைமையிலான 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒரு அறிக்கையைப் மன்மோகன் சிங்கிடம் கையளித்திருந்தார்கள். அதில் எல்எல்ஆர்சி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல், வடமாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டிய அவசியம், இராணுவ இருத்தலைக் குறைத்தல், சிவில் நிருவாகத்தை மீள் கொண்டுவருதல், உயர் பாதுகாப்பு வலயங்களை ஒழித்து தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைத்தல் போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே மன்மோகன் சிங், சிவசங்கர் மேனனை சிறீலங்காவுக்கு அனுப்பி வைத்தார் என நம்பப்படுகிறது. இரண்டு, எதிர்வரும் நவம்பர் மாதம் மனித உரிமைப் பேரவையின் அமர்வு ஜெனீவாவில் நடைபெற இருக்கிறது. இந்த அமர்வில் 192 ஐ.நா நாடுகளது மனித உரிமை முன்னேற்றம் பற்றி மீளாய்வு செய்யப்படும். இந்த மீளாய்வு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்படுகிறது. சிறீலங்காவின் மனித உரிமை நிலை பற்றிய மீளாய்வுக்குப் பொறுப்பாக மூன்று நாடுகள் இந்தியா, பெனின் மற்றும் இஸ்பானியா இருக்கும். ஜெனீவாவில் இந்தியா எடுக்கும் நிலைப்பாடு முற்றிலும் சிறீலங்கா எடுக்கும் நடவடிக்கையில் முற்றிலும் தங்கி இருக்கும் என சிவசங்க மேனன் எச்சரிக்கும் தொனியில் தெரிவித்துள்ளார்.

ஆனால் போகிற போக்கைப் பார்த்தால் சிறீலங்கா அரசுக்கு எல்எல்ஆர்சி அறிக்கையை அக்கறையோடு நடைமுறைப்படுத்தும் எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. கடந்த 3 மாதங்களாக எல்எல்ஆர்சி அறிக்கை பற்றி சிறீலங்கா அரசு எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. பன்னாட்டு சமூகத்தின் அழுத்தம் எதுவாகினும் அதனைச் சமாளிக்கலாம் என நம்புகிறார்கள்.

வடமாகாண சபைக்கான தேர்தல் அடுத்த ஆண்டு செப்தெம்பரில் நடைபெறும் எனவும் கால தாமதத்துக்கான காரணங்களையும பசில் இராசபக்சே சொல்லியிருக்கிறார். முதலாவது வடக்கில் கண்ணிவெடிகள் இன்னும் முற்றாக அகற்றப்படவில்லை. இரண்டாவதாக இடம் பெயர்ந்த மக்கள் எல்லோரையும் மீள் குடியமர்த்த வேண்டும். மூன்றாவதாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா கட்டிக் கொடுக்கும் 50,000 வீடுகள் கட்டிமுடிக்கப்பட வேண்டும்.

வட மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தினால் இப்போது சிங்கள இராணுவம் மேற்கொண்டுள்ள மண்பறிப்புக்கு இடைஞ்சலாக இருக்கும் என்று மகிந்த அரசு அஞ்சுகிறது. சிவில் நிருவாகத்தை முடக்கிவிட்டு இராணுவ ஆட்சி தொடர்வதே சிங்கள மயமாக்கல் மற்றும் பவுத்த மயமாக்கல் இரண்டுக்கும் வசதியாக இருக்கும் என மகிந்த அரசு நம்புகிறது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுவதையும் இராணுவம் மற்றும் கடற்படைத் தளங்கள் அமைப்பதற்குத் தனியார் காணிகள் அபகரிகப்படுவதையும் தாங்கிய செய்திகள் தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளன. சாவகச்சேரியில் அமைந்தள்ள காவல் நிலையத்துக்கு முன்பாக நீண்டகாலமாக இருந்த இந்துக் கோவிலின் ஒரு பகுதியை இடித்துவிட்டு அதன் அருகில் உள்ள அரச மரத்தின்கீழ் விசாலமான புத்தர் கோயில் ஒன்று துரிதமாக அமைக்கப்பட்டுவருகின்றது. இதனை சிங்கள காவல் துறையினரே முன்னின்று செய்கிறார்கள்.

ஆனால் தற்போது வழிபாடுசெய்துவரும் இந்துக் கோயிலொன்று உடைக்கப்பட்டு அக்கோயில் அமைந்திருக்கும் இடத்தில் புத்தகோயில் அமைக்கப்படுகிறது. இது இந்து சமயத்தினை இழிவுபடுத்தும் அதேவேளை பௌத்த பேரினவாதத்தின் கட்டு மீறிய வெறித்தனத்தைக் காட்டுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சீனன் வெளி பகுதியில் கடற்கரையோரமாக அமைந்துள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 20 ஏக்கர் காணியை ஆக்கிரமித்து சிறீலங்கா கடற்படை முகாம் அமைத்துள்ளது. இதனால் காணிச் சொந்தக்காரர்கள் தமது காணிகளில் குடியிருக்கவோ பயிர்ச் செய்கையில் ஈடுபடவோ முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தக் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள காணிகள் தோப்பூர் பிரதேச முஸ்லிம் மக்களினதும் சீனன் வெளி பிரதேச தமிழ் மக்களினதும் காணிகளாகும்.குடா நாட்டில் தனியார் காணிகள் மற்றும் கட்டிடங்கள் 1000 கும் அதிகமான இடங்களில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. இராணுவம் இவ்வாறு நிலை கொண்டுள்ள தென்மராட்சிப் பிரதேசத்தில் 300 ஏக்கர் நிலத்தையும் தெல்லிப்பளை பிரதேசத்தில் 61 ஏக்கர் நிலத்தையும் கைப்பற்றுவதற்கு இராணுவம் முயற்சிசெய்து வருவதாக வெளிவந்த செய்தியினால் மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் வீட்டுடன் இணைந்த காணிகள் 57 இலும் 5 வெற்றுக் காணிகளிலும் அரச காணி 1 இலும் வியாபார நிறுவனம் 1 இலும் காவற்றுறையினர் குடிகொண்டுள்ளனர். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் 716 காணிகள் உள்ளதாக கருதப்படுகிறது. இதில் வீட்டுடன் இணைந்த 378 காணிகளும் 283 வெற்றுக் காணிகளும 9 அரச காணிகளும் 46 வணிக நிறுவனங்களும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. கடற்படையினரின் கட்டுப்பாட்டில் மொத்தம் 253 காணிகள் உள்ளதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இதில் வீட்டுடன் 123 இணைந்த காணிகளும் 104 தனியார் காணிகளும் 19 அரச காணிகளும் 7 வியாபார நிறுவனங்களும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அரசியலுக்கு அப்பால் இராணுவ மயப்படுத்தல், சிங்கள மயப்படுத்தல், பவுத்த மயப்படுத்தல் ஆகியவற்றுக்கு எதிராக அதி வணக்கத்துக்குரிய மன்னார் மறை மாவட்ட பேராயர் இராயப்பு யோசேப் அடிகளாரே ஓங்கிக் குரல் கொடுத்துவருகிறார்.

1. பாரம்பரியமாக வாழ்ந்துவரும் மக்களை அவர்களுடைய பிரதேசத்தில் சிறுபான்மையினராக மாற்றும் திட்டத்தை அனுமதிக்கமுடியாது.

2. சமாதான காலத்தில் படைத்தரப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை அதிகளவில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

3. சமாதானம் வந்துவிட்டதாகக் கூறுகின்றனர், ஆனால் சமாதானத்தைத் தமிழ் மக்களால் பார்க்க முடியாதிருக்கின்றது.

4. முள்ளிக்குளத்திலும் பேசாலை 50 வீட்டுத் திட்டத்திலுமிருந்து மக்களைப் படைத்தரப்பு ஏன் விரட்டியடித்தது?

5. மக்கள் மீளக்குடியமர முடியாதுள்ளது. காடுகளிலும் கூடாரங்களிலும் எவ்வளவு காலத்துக்கு வாழ்வது?

இந்தக் கேள்விகளில் ஒரு கிறித்துவ துறவியின் நியாயமான கோபத்தைப் பார்க்கிறோம். மானிட நீதிக்காகக் குரல் கொடுக்கும் ஒரு அருட் தந்தையின் ஆன்மீகக் குரலைக் கேட்கிறோம். சிங்கள-பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்க எதிராகப் பலமிக்க அரணாக இருந்த விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் மீண்டும் தமிழர் தாயகம் மோசமான நில ஆக்கிரமிப்புக்கு இரையாகி வருகின்றது.

வே. தங்கவேலு

நாட்டிய அரங்கினுள் நுழையும் ஆற்றல்மிகு சிறுமி

இம்மாதம் முதலாம் திகதி குறைடன் Fairfield நடன மண்டபம் களைகட்டியது. திருமதி வினோதினி பரதனின், 10 வயது மாணவியான செல்வி கிஷ்னவி விஜயபாலனின் பரதநாட்டிய அரங்கேற்ரமே அதற்கான காரணி.

வெற்றிகரமாக நடந்தேறிய இவ் அரங்கேற்றரத்தில் இருந்த சில திருப்பங்கள் கலா ரசிகர்களக்கு மகிழ்ச்சி தருவதாகவே அமைந்திருந்தது. முதலாவதாக வினோதினியின் நட்டுவாங்கத்தில் நடந்த முதலாவது அரங்கேற்றம். அதன் வெற்றி நாட்டியக் கலைக்கு ஒரு புதிய குரு கிடைத்துள்ளார் என்ற நற்செய்தியுடன் தானே வருகிறது. அடுத்து 10 வயதுச் சிறிமிதானே என்று வந்தவர்களை அச்சிறுமியின் தாளம் தப்பாத நடனமும் முகபாவங்களும் ஒரு இதமான அதிர்ச்சியைக் கொடுத்தது. இதை எல்லோர் முகத்திலும் அவதானிக்க முடிந்தது. போகும்போது அதை வார்த்தைகளாலும் வெளியிட்டார்கள்.

கானபூஷணம் அம்பிகா தாமோதரன் அச்சிறுமியின் ஆற்ரலையும் உரிய முகபாவத்துடன் தாளம் தப்பாது ஆடவைத்த வினோதினி பரதனின் ஈடுபாட்டையும் புகழ்ந்ததுடன், இதை எப்படி வினோதினியின் கன்னி முயற்சி என்பது என்று வியந்தார்.

இன்னும் இரு முயற்சிகளும் இங்கு கவனத்திற்கு கொண்டுவர வேண்டியவை. பரதன் தம்பதியினரது மகள் பார்கவியின் நட்டுவாங்கத்தில் நடந்த கண்ணன் நடனம் சபையோர் பாராட்டையும் நாட்டியக் கலைமணி பிரதீஷ் குமார் பாராட்டையும் பெற்றது.

மற்றைய பக்கவாத்தியக் கலைஞர்கள் பற்றி கூறித்தான் நீங்கள் அறிய வேண்டும் என்றில்லை. ஆற்றலும் அனுபவமும் மிக்க அவர்கள், மாணிக்கம் யோகேஸ்வரனின் இனிய குரல் மண்டபம் முழவதும் ஒலிக்க அதற்கேற்றாற் போல் பாலசந்தர் (மிருதங்கம்) வி ஆர் கிருஷ்னன் (வயலின்) அம்பலவாணர் சிறினிவாசன் (மோர்சிங்) ஆகியோருடன் 17 வயது நிரம்பிய பிரவின் பிரதாபனின் புல்லாங்குழல் இசையும் ஒருங்கிணைந்து நிகழ்ச்சியை மெருகூட்டுவது போல் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தி விட்டார்கள்.

அரங்கேறிய சிறுமியிடம் ஆற்றல் உண்டு. அவர் அவ்வாற்றலை இந்த நாட்டியக் கலைக்காக அர்பணித்து மேலும் வளர்ப்பாரானால், அவரை இந்நாட்டியக் கலைக்குக் கிடைத்த குட்டித் தாரகை என்பதில் தவறில்லை.

- குமார்

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா

எமக்கு நாமே பகை என ஆனோம்

இத்தலைப்பில் முன்னரும் கூட எழுதியிருக்கலாம். ஆனால் இம்முறை இத்தலைப்பு முக்கியம் வாய்ந்தது, ஏனென்றால் சில நாட்களாக தயக்கமும் பதட்டமும் கலக்கமும் கவலையும் சூழ என் இருப்பு அமைந்தது. தனிமையாகிப் போவோமோ என வேதனை நீதூரப் பெற்றேன். காரணம், ஒரு ***ஒரு பேப்பர்*** இலிருந்து விலகுவதாக நான் எடுத்த முடிவு. திடீரென எடுத்த முடிவல்ல. என்றாலும் ஓர் இரவிற்குள்ளாகவே மரத்திலிருந்து அத்தனை இலைகளும் உதிர்ந்துவிட்டால் எப்படி இருக்கும்? அவ்வாறாக என் துக்கம் பீறிட்டது.

ஏன் அவ்வாறு முடிவெடுத்தேன்? 'கப்பலை மூழ்க வைத்த கடைசி மூட்டை' என்று சொல்வார்கள், அதாவது ஒவ்வொரு மூட்டையாக கப்பலில் இறக்கப்படும் போது கப்பல் மெல்ல மெல்ல தாழத் தொடங்குகிறது. இறுதியாக ஒரு மூட்டையுடன் கப்பல் முற்றாகவே கடலினுள் மூழ்கி அமிழ்ந்துவிடும். வெளிப்பார்வைக்கு கடைசி மூட்டையே கப்பலை அமிழ்த்தியது போல தோன்றும். உண்மையில் ஒவ்வொரு மூட்டைக்கும் அதில் பங்கு உண்டு.

தெரிந்தோ தெரியாமலோ தமிழ்த் தேசிய சக்திகளாளேலேயே தமிழ்த் தேசியத்தின் மீது மூட்டைகள் இறக்கப்படுகின்றன. அதற்கு ***ஒரு பேப்பர்*** உம் துணை போகின்றதோ எனும் சம்சயம் எனக்குண்டு. உண்மையில் ஈழத்துத் தமிழ்த் தேசியத்தை சிங்கள பௌத்த பேரினவாதமோ இந்திய மேலதிக்க வாதமோ அழிக்கத் தேவையில்லை. எம்மை நாமே அழித்துக் கொள்வோம்.

மிகக்குழப்பகரமான சூழலில் சிக்கித் திணறுகிறோம். மாலுமிகள் இல்லை, வழிகாட்டி இல்லை, காலமோ கும்மிருட்டு, திசை தெரியாது, பயணம் தெரியாது, இலக்குத் தெளிவில்லை. யார் நண்பர் யார் பகைவர் என்று ஒன்றுமே தெரியவில்லை. நல்ல மேய்ப்பன் இருந்தால் மந்தைகளாக பின் தொடர்வதில் தயக்கம் கிடையாது. இப்போது ஒன்றுமே இல்லை. ஆனால் ஒரு நம்பிக்கை இருக்கிறது. சிறு வெளிச்சம் தெரிகிறது. அந்த வெளிச்சத்தைத் தருவது ஒரு விளக்கு அல்ல சில சில விளக்குகள்.

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி, நாடு கடந்த அரசாங்கம், அனைத்துலகச் செயலகம், தலைமைச் செயலகம், உலகத் தமிழர் பேரவை, மக்களவை, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழ் இளையோர் அமைப்பு, பிரித்தானியத் தமிழர் பேரவை.. இவை தமிழ்த் தேசியத்திற்கான முக்கிய சக்திகள் என நம்புகின்றேன்.

பல்குழல் பீரங்கியாக சீறி, ஈழத் தமிழ்த் தேசியத்தை இவை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் ஆனால் என்ன நடக்கிறது இங்கே? பல்குழலில் ஒரு குழலை நோக்கி மற்றையகுழல் சீறக் காத்திருக்கின்றது. ஒரு குழலை அழிப்பதே மற்றை குழலின் நோக்கமாக இருக்கிறது.

இதற்கு ***ஒரு பேப்பர்*** உம் பலியாகி விட்டதோ என்பது தான் என் தீராவேதனை. தமிழ்த் தேசிய எதிரிகளின் மீது ஈவிரக்க மற்ற தாக்குதல் நடத்திய அதே பேனா, அதே மை தமிழ்த் தேசிய சக்திகள் மீதும் அதே விதமான தாக்குதல் நடத்துகிறது. அதனைக் கண்ட கனம் துடித்துப் போகிறேன்.

எங்களுக்கு இலக்கு இல்லை, நோக்கம் இல்லை, தமிழ்த் தேசியத்தின் மீதான பற்று இல்லை. எங்களிடம் பேனா இருக்கிறது, மை இருக்கிறது, பேப்பர் இருக்கிறது மேலாக கிண்டல் மொழி இருக்கிறது. நாடு கடந்த அரசாங்கத்தை நாட்களை கடத்தும் அரசாங்கம் என்று சொல்லும் வித்துவம் இருக்கிறது. நாங்கள் எதையாவது எழுதுவோம். ஈழத் தமிழ்த் தேசியம் அழிந்தால் என்ன, சிதைந்தால் என்ன? நாற்பதினாயிரம் மாவீரர் மண்ணில் புதையுண்டால் தான் என்ன? ஓர்மமும் உன்னதியாகமும் வீரமும் வீறாப்பும் அர்த்தம் இழந்து போனால் தான் என்ன? நாங்கள் எழுதுவோம், எதையும் எழுதுவோம். அவை தாம் நண்பர்களே என்னை படுத்தி எடுக்கிற வேதனை.

என் பேனா குமுறிக் குமுறி இதனை எழுதுகின்றது. கண்ணீர் சொட்ட எழுதுகின்றது. ஒன்று உரைப்பேன் கேளுங்கள், எம் ஈழத்தமிழ் மக்கள் அற்புதமானவர்கள். சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் லண்டன் மாநகருக்குள் திரண்டார்கள் என்றால் எந்தச் சமூகத்தில் இது நிகழும்? சுமார் நாற்பதினாயிரம் மாவீரர்கள் தம்மை கொடையாகக் கொடுத்தார்கள் என்றால் எந்த நிலத்தில் இது விளையும்? இன்னமும் தயாராக இருக்கின்றார்கள் எம் மக்கள். ஆனால் நாங்கள் என்ன செய்கின்றோம்?

மாவீரர்நாளுக்கும் முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கும் எப்பவேனும் இருந்து விட்டு வருகிற ராஜபக்சவிற்கும் ஒரு கணம் சிலிர்த்து விட்டு அடங்கி விடுகிறோம். மக்கள் தொடர்ந்து உணர்வூட்டப்படுகிறார்கள் இல்லை. மக்களே தமக்குத் தாமே உணர்வேற்றி விட்டு வந்து விடுகிறார்கள்.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

இவை அரசியல் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியே அல்லாது இதுவே முழுமையான அரசியல் வேலைத்திட்டம் இல்லை. அதேசமயம் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி, நாடு கடந்த அரசாங்கம் ஆகிய அமைப்புக்களின் நத்தை வேகம் சலிப்பைத் தருகின்றது. ஆனால் இதனை தமிழ்த்தேசிய நிலைப்பட்ட ஓர் ஊடகவியலாளர் அல்லது பத்திரிகையாளர் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார் என்பதே எனது கேள்வி. கண்டிக்கப் போகின்றாரா அல்லது தாக்குதல் முயற்சியா அல்லது நோக்கம் கருதிய விமர்சனமா?

ஒன்று சொல்வேன், பாம்மை அடித்துக் கொண்ற தடியால் அன்புக்குரியமாணவர்களை அடிக்க முடியாது. நான் பத்திரிகையாளனோ ஊடகவியாலாளனோ அல்லன்.

அரங்கு, இலக்கியம் என்ற வகையில் ஒரு படைப்பாளி. நான் நினைத்தேன், ஏன் இவ்வாறு துன்பம் தரும் விடயங்களில் ஈடுபடுவான்? எனக்குத் தெரியும் துறையில், தமிழ்த் தேசியம் தொடர்பாக ஏதும் பங்களிப்புச் செய்யலாமே என்று. எனவே அவை தொடர்பான துறையில் மும்முரமாகவும், கடுமையாகவும் உழைக்கின்றேன். அதனாலும் ஒதுங்கலாமோ எனும் யோசனை வந்தது.

என் பிள்ளை ***ஒரு பேப்பர்***, அதனை வளர்த்தவர்களில் நானும் ஒருவன். தமிழ்த் தேசியத்திற்காகப் பங்களிப்புச் செய்த ஊடகங்களில் தலையாயது ***ஒரு பேப்பர்***. மேலும், ***ஒரு பேப்பர்*** இல் நான் காண்கின்ற ஜனநாயக வழிகளில் நான் பணிபுரிந்த வேறெந்த ஊடகங்களில் காணமுடியாத ஜனநாயகத்தை ***ஒரு பேப்பர்*** இல் கண்டேன். ஒரு ***ஒரு பேப்பர்*** இன் தமிழ்த் தேசிய அரசியல் முழுமையாக எனக்கு ஒத்துப் போகின்ற ஒன்று.

ஆனால் ஓர் இடத்தில் இடர்ப்படுகின்றது. அந்த இடர்பாடு நெடுக நெடுக நிகழ்கின்றது. அதுவே என் பிரச்சினை யாருடையதோ நிகழ்ச்சி நிரலில் ***ஒரு பேப்பர்*** சிக்குப்படுகின்றதோ என்ற ஐமிச்சம் எனக்குக் கிடையாது. ஏனினும் ஒரு பக்கச்சார்பு நிலையை கொண்டுள்ளதோ என்ற சந்தேகமே எனக்குண்டு.

அது கூடத் தேவையில்லாத சந்தேகம். ***ஒரு பேப்பர்*** என் பிள்ளை நான் எச்சரிக்கை செய்யலாம் அவ்வளவே.

அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி

(ஒரு பேப்பருக்காக)

நீர் தேடி அலையும் நாம்!





விந்தை மிகு நிகழ்வுகள் தான் எத்தனை. நாம் அறிந்து நிகழ்பவை சில. நாம் அறியாமலே நிகழ்பவை பல. எம் சிந்தனைக்கு அப்பாற்பட்டவை. அதாவது அவை நிகழ்வதே எம் சிந்திக்கும் ஆற்றலுக்கு எட்டாது. அதுதான் சொல்வார்கள் கற்றது கை மண் அளவு கல்லாதது உலகளவு என்று.

இது காலம் வரை நாம் உயிர் என்றால் நீர். நீரின்றி உயிரில்லை என்ற கருத்தில்தானே ஊறி இருக்கின்றோம். அண்மையில் எங்கோ 20 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் கிளைன் 581 ஜி என்னும் கோளில் திரவ நிலையில் நீர் கண்டுபிடிக்கப்பட்டதும் அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து அது பற்றிய ஆய்வுகளை வானியல் பௌதிகத்துறை மேற்கொண்டது. இவ்வளவும் இது எங்கேயோ உள்ள கோளில் தான். மணிக்கு 25000 மைல் வேகத்தில் சென்றால் கூட அங்கு நாம் சென்றடைய ஐந்து இலட்சம் ஆண்டுகள் பிடிக்கும்.

இப்பொழுது வானியல் பௌதிகத்துறையினர் சிந்தனை, நீர் என்னும் திரவத்திற்குப் பதிலாக வேறு திரவத்தில் உயிர் உருவாகும் சாத்தியம் பற்றி சிந்திக்கிறது.

ரைற்ரான் என்னும் சனிக்கோளை வலம் வரும் ஒரு உபகோளில் திரவ நிலையில் மிதேன், எதேன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதாவது அந்த உபகோள் சய நூறு செல்சியஸ்சிற்கு குறைந்த வெப்பத்தில் வளிமண்டலத்தைக் கொண்டது. அதாவது அந்தச் சூழலில் சைபர் செல்சியஸ்ஸில் பனிக்கட்டியாகும் நீர் கற்பாறைகளை ஒத்த உறுதியுடைய ஒரு பொருளாக மாறியிருக்கும். முதலில் அங்கிருந்து தகவல் பெற்றதும் கூறினார்கள். அங்குள்ள பாறாங்கற்கள் நீர் என்றும் அம்மோனியா என்னும் காற்றுத் தான் அங்குள்ள மென் கற்கள் என்றும் இந்தச் சூழலில்தான் அங்கு நாம் திரவ மிதேன் ஏரிகளைக் கண்டறிந்துள்ளோம்.

இந்த ரைரோனின் வளிமண்டலம் எமது வளிமண்டலத்தைவிட 1.5 மடங்கு அமுக்கம் கூடியது. அதைவிட பூமியில் நிலவும் ஈர்ப்பு சக்தியைப் போல் பத்தில் ஒரு பங்கு தான் ஒரு பொருள் எடை பெறும்.

எமக்கு மிகவும் அண்மையில் உள்ள விண்மீன் அல்பா சென்ரோறி 4.32 ஒளி ஆண்டு தொலைவில் உள்ளது. அதாவது நாம் மணிக்கு 25000 மைல் வேகத்தில் சென்றாலும் அந்த விண்மீனை அடைய ஒரு இலட்சம் ஆண்டுகள் தேவை.

பறக்கும் தட்டு என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். அப்படி அந்த பறக்கும் தட்டு எமது பக்கத்து விண்மீனிலிருந்து ஒளியின் வேகத்துக்கு கிட்டிய வேகத்தில் வருவதனாலும் 4 ஆண்டுகளுக்கு மேலாகும் அப்படி ஒளியின் வேகத்தை அண்மித்து வருமளவிற்கு தொழில்நுட்ப ஆற்றல் பெற்ற அந்தப் பறக்கும் தட்டில் வருபவர்கள் ஏன் இங்கு ஒளித்து வந்து இறங்க வேண்டும் அவர்கள் தட்டில் இருந்தே எவ்வளவோ விந்தையான செயல்களையும் செய்யலாம். அப்படி பறக்கும் தட்டுக்களை கட்டுபவர்கள் அப்படி எதையும் செய்வதில்லையே.

இப்பொழுது ஏற்பட்டுள்ள புதிய சிந்தனையின்படி ரைறானின் திரவ ஏரிகள் உயிர் தோன்றும் சூழலை ஏன் உருவாக்க முடியாது? அதற்கு இன்னும் சில காலம் பொறுத்திருந்து பார்ப்போம்.

Staff Required!

வேலையாட்கள் தேவை!!!

- English & Tamil Speaking staff required for SLOUGH and SOUTHALL shops, to work for famous jewellery company "Gold Factory"
- Full time staff required, Please e-mail CV to : the goldfactory@gmail.com

Slough மற்றும் Southall பகுதியில் இயங்கும் Gold Factoryதங்க வியாபார நிறுவனத்தில் வேலை செய்வதற்கு முழு நேர வேலையாட்கள் தேவை!

விண்ணப்பங்களை கீழேயுள்ள மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

தொடர்புகளுக்கு Tel : 020 8813 8979

பறிபோகும் நிலங்களும் துணைபோகும் சில தமிழர்களும்!!

சாத்திரி
(ஒரு பேப்பர்)

அண்மைக்காலமாக அனைத்து ஊடகங்களையும் நிறைத்து நிற்கும் பரபரப்பானதும் கவலையானதுமான செய்தியென்றால் தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுவதான செய்திகளாகவே இருக்கும். நில அபகரிப்பினை எதிர்த்து பாதிக்கப் பட்ட மக்கள் தனியாகவும் அமைப்புக்களோடு இணைந்தும் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவையும் மக்களோடு இணைந்து போராட்டங்களை நடாத்தியுள்ளன. ஆனாலும் சிறிலங்கா அரசோ, அதன் இராணுவமோ இப்போராட்டங்களையிட்டு அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.

மக்களின் அரசியல் ரீதியானதும் அமைதிவழியிலான போராட்டங்களிற்கு இலங்கைத் தீவில் எந்த மதிப்பும் இல்லையென்பது உலகறிந்த விடையம்தான். அதனால்தான் உலக நாடுகள் சிலவும் இந்த தமிழர் தாயகத்தின் நிலப் பறிப்புகளிற்கு எதிராக கண்டனங்களை எழுப்பத் தொடங்கியுள்ளன. நிலப்பறிப்பு என்பது வன்னியிலும் யாழ் மாவட்டத்தினை அண்டிய பகுதியிலும் நடை பெறுபவையே பெரும்பாலும் தமிழ் செய்தி ஊடகங்களில் வெளியாகின்றது ஆனால் மன்னாரிலும் மட்டக்களப்பு அம்பாறை பகுதிகளில் பறிபோகும் நிலங்களை பற்றி அதிகளவு செய்திகள் வெளியாவதும் இல்லை. அதனைப்பற்றி யாரும் அலட்டிக்கொள்வதாகவும் தெரியவில்லை. தமிழர் தரப்பின் போராட்ட சக்தியாகவும் பலமாகவும் இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் அழிவிற்கு பின்னர் அடுத்தாக நிலப் பறிப்பும் மதப்பரம்பலும் சமூக் சீர்கேடுகளும் தாராளமாக்கப்பட்டு மேலும் மேலும் தமிழர் தரப்பை பலவீனப்படுத்தி இலங்கைத் தீவில் தமிழ் பேசும் இனமொன்று இருந்ததற்கான அடையாளங்களே இல்லாமல் போகச் செய்வதற்கான அனைத்து வழிகளும் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப் படுகின்றது.

இவற்றை எதிர்த்து மக்கள் எவ்வளதூரம் போராடப் போகின்றார்கள்?. எத்தனைபேர் ஒன்றாக அணி திரளப் போகின்றார்கள்? யார்பின்னால் அணி திரளப் போகின்றார்கள்? அல்லது யார் போராடும் மக்களை சரியான பாதையில் வழிநடாத்தப் போகின்றார்கள் என்பது பெரும் கேள்விக்குறியே? ஏனெனில் தமிழர்களை பொறுத்தவரை ஒரு கருத்துடன் ஒட்டுமொத்த தமிழினமும் ஓரணியில் இணைந்து போராடுவது என்பது குதிரைக்கு கொம்பு முளைத்தமாதிரி. எனவே ஒட்டு மொத்த மக்கள் போராட்டம் என்பதை எமது இனத்தில் எதிர்பார்க்க ஏன் நினைத்துப் பார்க்க கூட முடியாத ஒன்று ஆனாலும் பாதிக்கப் பட்டவர்கள் மட்டும் அவ்வப்பொழுது சிறு சிறு குழுக்களாக போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் நிலைமை இப்படியிருக்க, எம்மவரின் நிலங்களை இலங்கையரசு பறிப்பதற்கு எம்மவர் சிலரே துணை போவதனை என்னவென்று சொல்வது? அப்படி இலங் கையரசிற்கு துணைபோகும் ஒருவர் தான் கிழக்கு மகாணத்தை சேர்ந்த நித்தியானந்தராஜா பிரசாந்தன் என்பவர். சிங்கப்பூரில் தனது படிப்பினை முடித்துக்கொண்டு கடந்த வருடம் இலங்கை திரும்பிய இவர் றியல் எஸ்ரேற் வியாபாரம் என்கிற போர்வையில் இலங்கை இராணுவ அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுடன் இணைந்து இலங்கைரசின் நிலப் பறிப்பிற்கு துணை போகின்ற ஒருவராக இருக்கின்றார். இவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாணத் தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிற்கு நெருங்கிய உறவினரும்கூட..

நிலப்பறிப்பிற்கு துணைபோகும் பிரசாந்தன் அதனை சாதுரியமாக வியாபரம் என்கிற வகைக்குள் அடக்கி விடுகிறார் அதனை இரண்டு வகையாகப் பார்க்கலாம். அது எப்படியெனில் கிழக்கு மாகாணத்தின் மட்டு அம்பாறை மாவட்டங்களில் இலங்கை இராணுவம் ஆக்கிரமித்து முகாம்கள் அல்லது காவலரண்கள் அமைத்துள்ள காணிகளின் விபரங்களை திரட்டுவார். அதன் பின்னர் அந்த காணிகளின் உரிமையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவார்.

இரண்டாவது வகை, தங்கள் காணிகளை திரும்ப பெறுவதற்காக சட்ட நடவடிக்கைகளில் இறங்கியிருப்பவர்கள் அல்லது அதற்கான முயற்சிகளில் இறங்கியிருப்பவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவார். தொடர்புகளை ஏற்படுத்தியவர் உங்கள் காணிகளை திரும்ப பெற்றுதருவதற்காக முயற்சிக்கிறேன் அதற்குரிய ஆவணங்களை அல்லது பிரதிகளை தரும்படி கேட்டு பெற்றுக்கொள்வார். காணி உரிமையாளர்களும் தங்களிற்கு காணி எப்படியாவது கிடைத்துவிடும் என்கிற நம்பிக்கையில் விபரங்களை கொடுப்பார்கள் . அதன்பின்னர் அந்த பகுதி இராணுவ அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சம்பந்தப் பட்ட காணியை விற்பதற்குரிய ஆவணங்கள் கிடைத்து விட்டதாகவும் அதற்குரிய அனுமதியையும் அங்குள்ள படை நிலைகளை அகற்றுமாறும் கேட்டுக் கொள்வதோடு அவர்களிற்குரிய வழைமையான பங்கையும் பேசி முடித்துவிடுவார். அதன்பின்னர் காணி உரிமையாளரை தொடர்பு கொண்டு படையினர் உங்கள் காணிகளில் இருந்து விலக மறுக்கிறார்கள் நீங்கள் நீதி மன்றம் வழக்கு என்று போயும் பிரயோசனம் இல்லை. அதனால் போசாமல் வருகிற விலைக்கு விற்று விடுங்கள் அதற்கும் நானே ஏற்பாடு செய்கிறேன் என்று அடுத்த திட்டத்தை போடுவார். காணி உரிமையாளரும் ஏதோ வந்ததுவரை லாபம் என்று நினைத்து சம்மதம் தெரிவித்து விடுவார். பின்னர் பிரசாந்தன் மிக குறைந்த அடிமாட்டு விலை ஒன்றை நிர்ணயம் செய்து காணி உரிமையாளரிடம் கையெழுத்தை வாங்கிவிடுவார். பின்னர் என்ன படை நிலைகளை விலக்கிவிட்டு காணி சிங்களவர்களிற்கோ அல்லது பெரும் முஸ்லிம் வியாபாரிகளிற்கோ பெரும் தொகை பணத்திற்கு விற்றுவிட்டு படையதிகாரிக்கும் புலனாய்வாளர்களிற்கும் அவர்கள் பங்கை கொடுத்துவிட்டு தானும் பெரும் இலாபம் சம்பாதித்துகொள்கிறார்.

ஊரில் காணிகள் உள்ளவர்களின் விபரங்களை திரட்டிய பின்னர் புலம்பெயர் தேசங்களில் அவர்களின் தொடர்புகளை எடுத்து உங்கள் காணிகளை விற்றுத்தரலாம் நீங்கள் ஆவணங்களையும் அனுப்பி கையெழுத்து மட்டும் போட்டால் போதும் உங்கள் வெளி நாட்டு வங்கியில் பணம் போடப்படும் என்று பேசி இது வரை பலரது காணிகளிற்கு பேசப்பட்ட விலையைவிட குறைந்தளவு பணத்தையே வங்கிகளிலும் இட்டிருக்கிறார். புலம் பெயர்ந்து வாழ்பவர்களும் இனி யார் ஊருக்கு போய் ஆளை பிடிச்சு காணி விக்கிறது என்கிற மெத்தனப் போக்கில் இவரது வலையில் வீழ்ந்துள்ளனர். எனவே புலம் பெயர் தமிழர்களோ நீங்களும் பறிபோகும் நிலங்களிற்கு துணையாகப் போகின்றீர்களா?? இனி உங்கடை விருப்பம்.

இது கரும்புலிகள்
நினைவெடுக்கும் காலம்
இவர் காவியத்தைக் கூறுகையில்
வாய்பிளக்கும் ஞாலம்

இவர்கள் உணர்வு தேடித்
தோற்றேன்
உடல் வீழ்ந்த இடம்
தேடித்தோற்றேன்
பாவெழுந்த உவமைதேடித்
தோற்றேன்

ஓசை நயம் வேண்டி மட்டும்
இவர்களுக்காய் உவமை
சொல்வேன்
உண்மையாக உவமைசொல்லச்
சொல்லுமில்லை மொழியுமில்லை
கண்டறியும் திறன் எனக்குமில்லை
எந்தக் கவிஞர்க்குமில்லை

கரும்புலிகள்.....

புலித்தாயின் கருவறைக்குள்
உருவெடுத்த புயல்கள்
இவர் பகையுரசம் போது
தோன்றும் தமிழ்த்தாயின்
சுடர்கள் மனசறிய முடியாப்
பெரும் புதிர்கள்
எங்கள் மன்னவனின்
கனவை வெல்லும்
உயிர்கள் விடுதலையின்
தடையகற்றும் கரங்கள்– வீரத்
தலைவனது நெஞ்சிலென்றும்
இவர்களது முகங்கள்

சாவழைத்து – எங்கள்
வாழ்வளிக்கத் – தங்கள்
வாழ்வழித்துப்
பகை வீழ்ந்தொழியப்
புயல் வேகமெனக்
களம் போய்வெடித்தோர்.
சாவைத் துணைக்கழைத்து
பகையைத் துடைத்தழித்து
விடிவைப் பிடித்துவந்த
விடுதலை தந்து நின்றோர்
எங்கள் நெஞ்சில் என்றும்
நிலைத்துக் கொண்டோர்.
உடலோடு கந்தகம் இணைத்து
உணர்வோடு சுதந்திரம்
கலந்து விலை கூறா..

மாமனதை யாரறிவர்.....

உயிலினைத் துறந்து!
வீரத்தின் சிகரத்தில்
அமர்ந்து தாகமெம் தமிழீழமென்று
சாவதின் வாசலில் நின்று
வாசகம் கூறியே சென்றோர்

அண்டவெளியில்
வீடு கட்ட அடுக்கெடுக்கம்
விஞ்ஞானம் குண்டு கொண்டு
செல்லும் இவர் கொண்ட மனம்
என்னவென்று கண்டுகொள்ள
முடியாது கலங்கித் தவிக்கிறது
இவர் பொங்கும் அலையோ
புயலின் உறவோ
தீயின் சுடரோ எரிமலையோ
இடியோ மின்னற்பொறியோ
அல்ல....

ஈழப்பெரியோனின் கையாலே
புடம்போட்ட தங்கங்கள்
அவன் காட்டும் தடம்மீது
நடைபோட்ட வேங்கைகள்
கரிகாலனிற் கருகிருந்த
கற்பூரங்கள் விடிகாலைப்
பொழுதாக்கும்
சூரியர்கள் ஒரு காலமும்
அணைந்து போகா
ஒளிச்சுடர்கள்
வருங்காலப் பயிர்களிற்காய்
பசளையான விளைநலங்கள்
தனக்கென வாழாத்
தவப்புதல்வர்கள்
மனிதர்களுக்குள்
மகோன்னதங்கள்

தாயாய் அணைத்து
தந்தையாள் வளர்த்து
குரவாய் நடந்து–வழிகொடுத்து
வழியணுப்பும் வலிய நெஞ்சம்
வலியெடுத்து துடிக்கும்
வெடித்துப் பகை
முடிக்கும்– இவர்
முடிவு கேட்டு

இன்பக் கனவை
இறுக்கி வைத்துக்
துன்பச் சுமையைத்
தோழில் ஏற்றித் தலைவன்
மூச்சின் விச்சு ஆகிக்
கடலேறிக் கரைந்தவராய்
மாற்றான் ஊருக்குள்
நுழைந்து பேரெதுவும்
கிடையாது போகுமெனத்
தெரிந்தவராய்ச் சாகுமிவர்
மாமனதை யாரறிவார்...

- செந்தோழன் [விடுதலைப்புலிகள் இதழ் 2004]

இலங்கை மற்றும் உலகின் எந்தப் பாகத்திற்கும்
DOOR TO DOOR DELIVERY

இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை
• இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்.
• Express Letter Service
• Vehicle Shipping
• Furniture Shipping
• Packing Service
• Relocation Service
• Man and Van Service
• Packing Materials
• European Parcel Service
DUNN SHIPPING LTD.
020 8842 2020
07949 361 434 - 07949 361 313
info@dunnshipping.co.uk • www.dunnshipping.co.uk
பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படும் இடங்கள்
• GREENFORD • WIMBLEDON • VAUXHALL • BIRMINGHAM
• STOKE-ON-TRENT • A-LANKA TRAVELS LTD, TOOTING

வெறும் தமிழ் உணர்வுகளுக்காக....

ஸ்டாக்ஹோல்ம் செல்வதற்கான விமானம் 86 வது நுழைவாயிலில் இருந்து புறப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்ததால், மெதுவாக நானும் என் மனைவி அம்முவும் கைக்கோர்த்துக் கொண்டு ஒன்று இரண்டு மூன்று. என ஒவ்வொன்றாக, கடந்தபடி 70 வது நுழைவாயில் வரை வந்தாகி விட்டது. கண்ணாடி சுவர்களின் வழியாக குழந்தைகளும், இளைஞர்களும், நடுத்தர வயது மக்களும், விமானம் வந்து நிற்பதை அது புறப்படுதை வியப்பாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

விமானங்களில் எத்தனை முறை பறந்தாலும், விமானங்கள் தரையில் ஓடும் பொழுதும் தலைக்கு மேலேப் பறக்கும் பொழுதும் தலைசாய்த்து பார்ப்பதும் ஒரு சுவாரசியந்தான். அவர்களுடன் அம்முவும் சேர்ந்து கொண்டது மனநிலையை மேலும் ரம்மியமாக்கியது.

உங்கட இந்தியா, தலைவரை அந்த மான் தீவுகளில் எங்கேயாவது பாதுகாப்பாக வைத்திருக்குமோ என உள்மனது அடிக்கடி சொல்லிக்கொண்டே இருக்கு...

குட்டிநகரமே இந்த சூரிச் விமானநிலையத்தில் இருப்பதைப் போன்ற ஒரு பிரம்மாண்டம். ஈரோ - ரூபாய் மதிப்பு மாற்றம் நினைவிற்கு வந்ததால் ஆடைகள் விற்கும் பகுதியைத் தவிர்த்து அம்மு சுவிட்சர்லாந்து கேட்ட சாக்லேட்டுகளையும் சில வாழ்த்து அட்டைகளையும் வாங்கிக் கொண்டு, மேலும் சில நுழைவாயில்கள் கடந்து , ஒரு காப்பிக்கடைக்கு எதிரே விலைப்பட்டியலைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது,

“என்ன சாப்பிடுறீங்க?” என்பதை ஈழத்துத் தமிழ் உச்சரிப்பில் ஒருவர் கடையினுள் இருந்து கேட்டார். வலிகள் வேதனைகளுடன் தமிழையும் போகும் இடமெல்லாம் கொண்டு சென்றவர்கள் ஈழத்தவர்கள். என்னைப் பொறுத்தவரை சுந்தரத் தமிழ், ஈழத்துத் தமிழ்தான்....

நாங்கள் கேட்ட காப்பிச்சினோவை அவர் கொடுக்கும் பொழுது கையில் புலிப் படத்தைப் பச்சைக் குத்தி இருந்ததைப் பார்த்த அம்மு என்னை இடுப்பில் குத்தினாள். ஆண் குழந்தை பிறந்தால் திலீபன் எனவும் பெண் குழந்தை பிறந்தால் இசைப்பிரியா எனவும் பெயர் வைக்க இப்பொழுதே நான் முடிவு செய்து வைத்துள்ள அளவுக்கு புலிகளைப் பிடிக்கும் என்பது அம்முவிற்குத் தெரியும். இருந்தாலும் அம்முவிற்கு இதில் இருக்கும் நுட்பமான உணர்வுகள் புரியாது, அவளைப் பொறுத்தமட்டில் ஐரோப்பிய பாஸ்போர்ட் கிடைக்கும் வரை, இந்திய இறையாண்மைக்கு எதிராக எதுவும் செய்யக்கூடாது.

நாங்கள். எவ்வளவு வற்புறுத்தியும் அந்த புலி நண்பர் காசு வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார்....

“தினமும் ஒரு தமிழனையாவது சந்தித்துவிடுவேன்... ஒரு சின்ன திருப்தி அவர்களுக்கு காப்பியோ அல்லது அவர்கள் விரும்பும் ஏதோ ஒன்றைத் தந்து தமிழில் கதைப்பது”

“நடிகர்களைப் பார்த்து இருக்கிறீர்களா?” இது அம்மு, அவளின் அடுத்த கேள்வி சூரியாவைப் பார்த்து இருக்கிறீர்களா என்பதுதான்..

“நிறைய நடிகர் நடிகைகள் வருவாங்க, அவர்களை எல்லாம் கண்டுக்க மாட்டேன்... நான் பேச விரும்புவது சாமானிய மனிதர்களிடந்தான்”

“தலைவர் உயிரோட இருக்காரா?” எந்த ஈழத்தமிழரை ஐரோப்பாவில் சந்தித்தாலும் நான் மறக்காமல் கேட்கும் கேள்வி இதுதான்....

“தெரியாது, ஆனால் உங்கட இந்தியா, தலைவரை அந்த மான் தீவுகளில் எங்கேயாவது பாதுகாப்பாக வைத்திருக்குமோ என உள்மனது அடிக்கடி சொல்லிக்கொண்டே இருக்கு”...

ஏற்கனவே எனக்குத் தெரிந்து இருந்த விசயங்கள் என்றாலும் புலிகளின் ஈழத்து அரசாங்கத்தின் ஒழுக்கம், நேர்மை, நிர்வாகம் என அவர் தொடர்ந்து பேசியதைக் கேட்க சுவாரசியமாகத்தான் இருந்தது.

“எத்தனை வருஷமா இந்தக் கடை இங்கு வச்சிருக்கீங்க?”

“இது என் கடை இல்லை தம்பி, நான் இங்க வேலைப் பார்க்கிறேன், 20 வருஷமா இங்கடதான் வேலை செய்யுறேன் !! ”

ஸ்டாக்ஹோல்ம் விமானத்திற்கு அழைப்பு வர, மின்னஞ்சல் முகவரிகளைப் பரிமாறிக்கொண்டு விடைபெற்றோம்.

விமானஇருக்கையில் சன்னலின் வெளியே வேடிக்கைப் பார்த்தபடி...

“என்னதான் டைகர்ஸோட டிசிப்ளினோ, ஹானஸ்டியோ... எதிக்ஸோ... முதலாளியை ஏமாத்திவிட்டு வர்றவன் போறவனுக்கு எல்லாம் காப்பி கொடுக்கிற எத்திக்ஸ்.. ஒரு நாளைக்கு 10 பிராங்க்னு வச்சிக்கிட்டா ஒரு மாசத்துக்கு 250 பிராங்க், 20 வருஷத்துக்கு எத்தனை பிராங்க்

முதலாளியை அந்த ஆளு ஏமாத்திருக்காரு, கடைத் தேங்கா வழிப்பிள்ளையார்தான் ஞாபகத்துக்கு வருது, .. இதுல எதுக்குமே யூஸ் இல்லாத தமிழ் ஃபீலிங்ஸ் வேற !!!? அம்மு பொரிந்து தள்ளினாள்.....

நான் பதில் பேசவில்லை. அவர் எனக்கு மின்னஞ்சல் எழுதிக் கொடுத்து இருந்த தாளைத் திருப்பிப் பார்த்தேன். அது நாங்கள் குடித்த காப்பிக்கான பில்.

அம்முவின் கவனம் கண்ணாடி சுவருக்கு அப்பால் இருந்த விமானங்களின் மேல் அலைபாய்ந்து கொண்டிருந்த பொழுது புலி நண்பர் எங்களுக்கான காசை அவரின் பாக்கெட்டில் இருந்து எடுத்து கல்லாவில் போட்டதையும் , அதற்கான பில்லை அச்சிட்டதையும் நான் கவனித்து இருந்தேன்.

அம்மு சொன்ன அதே கணக்குதான் ஆனால் புலி நண்பர் தன்னிடம் இருந்து கொடுத்து இருக்கிறார், வெறும் தமிழ் உணர்வுக்காக !!!

வினையூக்கி

கோர்த்து விடும் செய்திகள்

■ Reconnaissance இற்கு spellaing தெரியாதவர்கள் புலிகளைப்பற்றி எழுதக் கூடாது

இப்போது புதிதாக ஒரு தத்துவத்தை முள்ளிவாய்க்காலின் பின் வெளியிட்டுள்ளார்கள் அதாவது "Reconnaissanc இற்கு spellaing தெரியாதவர்கள் புலிகளைப்பற்றி எழுதக் கூடாது” இந்தத் தத்துவத்தின் ரிஷிமூலம் தேடினால் புதுடில்லி வீசி எறியும் எலும்புத் துண்டுகளில் போய் முடியும். இந்தத் தத்துவாசிரியர்கள் விடுதலைப் புலிகளைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதுவார்கள் காணொளிப் பேட்டிகளை மணிக்கணக்காத் தயாரித்து youtubeல் தரவேற்றுவார்கள் அதில் இந்தியாவைப் பற்றி ஒரு வார்த்தை கூட இருக்காது.

■ பழைய திசைகள் காட்டுவோர்

காணி அபகரிப்பிற்கு எதிராக அமைதியான வழியில் போராடியவர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதை எதிர்த்தோ கழிவுத்திரவம் வீசப்பட்டதை எதிர்த்தோ சிங்கள உழைக்கும் வர்க்கம் குரல் கொடுக்கவில்லை. சிறைக் கைதிகள் அநியாயமாகக் கொல்லப்பட்ட போது சிங்கள உழைக்கும் வர்க்கம் மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் புதிய திசைகள் காட்டுகிறோம் என்று கிளம்பிய சில முள்ளிவாய்க்காலின் பின் முளைத்த காளான்கள் தமிழ்த்தேசியப் போராட்டம் சிங்கள உழைக்கும் வர்கத்துடன் இணைந்த ஒரு போராட்டமாக இருக்க வேண்டும் என்று எமக்குப் புதுத் திசைகள் காட்டுகிறோம் என்று குரலெழுப்புகின்றனர். இது ஒன்றும் புதிய திசைகள் அல்ல ஏற்கனவே தோழாதி தோழர்கள் வி.பொன்னம்பலமும் எஸ் சண்முகதாசனும் பயணித்து சறுக்கி விழுந்த திசைதான்.

■ பார்க்லேயிஸ் வங்கியின் பட்டி கழற்றிய வைரம் பட்டை தீட்டப்பட்டது

வங்கிகளிடையான குறுங்காலக் கடன்களுக்கான வட்டிவீதத்தை வேண்டுமென்றே தமது இலாபத்தை நோக்காகக் கொண்டு அதிகரித்த பர்க்லேயிஸ் வங்கியின் தலைவர் பொப் டயமண்ட் பதவி விலகும் போது சும்மா விலகவில்லை. மூன்றரைக் கோடி பவுண்கள் அவருக்கு பலவிதத்திலும் கிடைக்கும். யானை இருந்தாலும் பொன் இறந்தாலும் பொன். ஆனால் நரிகளுமா?

■ சிங் சொல்றான் மஹ்ந்த செய்றான்

